# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 43 சோபகிருது வருடம், ஆவணி மாதம் 04ஆம் திகதி திங்கட்கிழமை
(21.08.2023) ஹிஜ்ரி 1445, ஸபர் - 04, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50


## தமிழர்களிடையே ஒற்றுமையில்லை

**அதனாலேயே ஆட்சியாளர்களின் நிகழ்ச்சிநிரலில் உள்வாங்கப்படுவதாக சார்ள்ஸ் எம்.பி. குற்றச்சாட்டு**



விஜயரத்தினம் சரவணன்

வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய பகுதிகளில் வாழும் தமிழ் மக்களிடையிலும் தமிழ் மக்கள் பிரதிநிதிகளிடையிலும் இருக்கின்ற ஒற்றுமை யின்மை...

02 பக்கம்

## நல்லூர் கந்தன் கொடியேற்றம் இன்று சுற்றுவீதிகளுக்குப் பூட்டு

பு. கஜிந்தன்

வரலாற்றுப் புகழ்மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழா கொடியேற்றத்துடன் இன்று (21) ஆரம்பமாகவுள்ள நிலையில், ஆலய சுற்றுவீதிகளில் வீதித்தடைகள் அமைக்கப்பட்டு போக்குவரத்துக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸார் கண்காணிப்பு பணியிலும் ஈடுபட்டுள்ளனர்.

02 பக்கம்

# அடித்தால் திருப்பி அடியுங்கள்!



## தமிழர்களுக்கு சொல்கிறார் மனோ

**மாத்தளை சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பில் தெரிவிப்பு**

அரசாங்கமும் சட்டமும் எங்களுக்கு பாதுகாப்பு தராவிட்டால், எமது குடும்பத்தையும் சொத்தையும் பாதுகாக்க நாம் திருப்பியடிக்க முடியும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி. முல்லைத்தீவில் நேற்று (20) தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற 'மலையகம்-200' நூல் வெளியீட்டு விழாவில் மாத்தளை மாவட்ட ரத்வத்தை தோட்டத்தில்...

02 பக்கம்

## உஷ்



நாட்டின் தற்போதைய நிலைமையில் முதலில் பாராளுமன்ற தேர்தலா அல்லது ஜனாதிபதித் தேர்தலா சிறந்ததென ஆலோசிக்கும் ஜனாதிபதி ரணில், அது தொடர்பான ஜோதிட ராசியை பார்ப்பதற்கு தீர்மானித்துள்ளார்.

அந்த தீர்மானத்துக்கமைய ரணிலுக்கு நெருக்கமான ஒருவர் இந்தியா சென்றுள்ளாராம். அந்த ஜோதிட ஆலோசனையின்படியே எந்த தேர்தல் முதலில் வருமென முடிவு செய்யப்படுமாம்.

## இறைச்சிகளில் அவதானம் தேவை



**சுகாதாரத்துறை எச்சரிக்கை**

கே. சுபானி

நாட்டில் கடும் வறட்சியுடனான காலநிலை நிலவும் நிலையில், கால்நடைகளின் இறைச்சிகளை உண்பதில் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு பொதுச் சுகாதார...

02 பக்கம்



வரலாற்றுப் புகழ்மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு செங்குந்தர் பரம்பரையினரால் சம்பிரதாயபூர்வமாக கொடிச்சீலை எடுத்துவரும் நிகழ்வு நேற்று (20) இடம்பெற்றது. (படப்பிடிப்பு: யாழ். செய்தியாளர்)

## வறட்சியினால் 02 இலட்சம் பேர் பாதிப்பு

கே.சுபானி

நாட்டில் நிலவும் கடும் வறட்சியுடனான காலநிலையால் 15 மாவட்டங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 10 ஆயிரத்து 798 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வறட்சியின் கோரப்பிடிக்குள் சிக்கியுள்ள யாழ்ப்பாணம், குருணாகல், இரத்தினபுரி, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையிலானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று (20) வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்

## சர்ச்சைக்குள்ளான நடிகர் ரஜினிகாந்த்

**உத்தர பிரதேச முதல்வரின் காலில் விழுந்ததால் பரபரப்பு**



நடிகர் ரஜினிகாந்த் உத்தர பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத்தின் காலில் விழுந்து வணங்கியமை இந்தியாவில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ரஜினிகாந்த் தனது சமீபத்திய 'ஜெயிலர்' படத்தை முன்னிட்டு...

02 பக்கம்

## சவாலை உருவாக்கியுள்ள ஆசிரியர்களின் வெளியேற்றம்

**ஐயாயிரம் ஆசிரியர்கள் விடுமுறையில் வெளிநாடுகளுக்கு**

நமது நிருபர்

அரசாங்கம் அறிமுகப் படுத்தியுள்ள விடுமுறைத் திட்டத்தின் கீழ் பெரும் எண்ணிக்கையிலான தகுதிவாய்ந்த...

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...



அப்படியெண்டா, ஒரு கன்னத்தில அறைந்தால் அறைந்த ஆளின் மறுகன்னத்தில் கொடுங்கோ எண்டு சொல்லுறார் மனோ...

## கச்சதீவினால் 80 வீதமான கடல் வளத்தை இழந்தோம்



**கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு**

பு. கஜிந்தன்

1976ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை மூலம் கச்சதீவு எமக்குரிய கடற்பரப்பாக அங்கீகரிக்கப்பட்ட நிலையில் நாம் 80 வீதமான...

02 பக்கம்

## வெங்காய ஏற்றுமதிக்கு வரி விதித்தது இந்தியா

**உள்நாட்டில் இருப்பின் அறிக்கையை கோரும் விவசாய அமைச்சு**

02பக்கம்

## கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிறுவருக்கான இருதய சிகிச்சைகள் நிறுத்தம்

கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சிறுவர் இருதய சிகிச்சைப் பிரிவின் பல சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின்...

02 பக்கம்





தொழில் மற்றும் முதலீட்டு மூலதன தேவைகளுக்கு குறைந்த வட்டியுடனான கடன்

நலிவடைந்திருக்கும் வியாபாரங்களை மீள கட்டியெழுப்பும் நிதி மறுசீரமைப்பு

புதிய தொழில்முனைவோருக்கான வியாபார ஆலோசனைகள் மற்றும் நிதித்துறை வசதிகள்

ஏற்றுமதி வியுர்புர்ருத்ஐது ஊக்குவீக்குமு ஆலோர்சுஐனுகுளு முற்றுமு குவுருச்சீகுருமுர்னு நிதிந்துஐறு வுசுதிகுளு

மேலதிக விபரங்களுக்கு இப்பொழுதே 0112 481608 / 0112 481356 / 0112 481426 க்கு அழையுங்கள் அல்லது அருகிலுள்ள மக்கள் வங்கியில் பெற்றுக் கொள்ளலாம்.

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

www.peoplesbank.lk

1961 PEOPLE'S BANK CALL CENTRE

PEOPLE'S BANK

Pride of the Nation

# நல்லதண்ணி பௌத்த விகாரை புத்தர்சிலையில் 27 குளவிக் கூடுகள்

## அகற்றுமாறு பொதுமக்கள் கோரிக்கை



மஸ்கெலியா செய்தியாளர்

நல்லதண்ணி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையில் 27 குளவிக் கூடுகள் காணப்படுவதால் அப்பகுதி வழியாக சிவனொளிபாத மலைக்கு தரிசனம் செய்ய செல்லும் உள்ளூர் மற்றும் வெளியூர் சுற்றுலாப் பயணிகள் அச்சமடைந்துள்ளனர்.

நல்லதண்ணி நகரில் இருந்து சிவனொளிபாதமலைக்கு செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ள நாகதீப பௌத்த விகாரையில் சுமார் 30 அடி உயரமுடைய புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ளது. அந்த புத்தர் சிலையிலும் அதன் மண்டபத்திலும் ஏராளமான குளவிக் கூடுகள் காணப்படுகின்றன.

தற்போது இந்தப் பகுதியில் கடுமையான வெப்பமான காலநிலை தோன்றியுள்ளதுடன் அதிகளவில் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் சிவனொளிபாத மலைக்கு செல்வதால் காகங்கள், கழுகு போன்ற பறவைகள், குளவிக் கூடுகளை தாக்கும் பட்சத்திலும் கடும் காற்று வீசும் வேளையில் குளவிகள் மக்களை தாக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

ஆகையால், சம்பந்தப்பட்ட பௌத்த விகாரையின் மதகுரு மற்றும் நல்லதண்ணி வன பாதுகாப்பு அதிகாரிகள் முன் வந்து அந்த குளவிக் கூடுகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி ரணில் சிங்கப்பூருக்கு பயணம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருநாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று சிங்கப்பூருக்கு பயணமாகவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

ஜனாதிபதியின் இந்த விஜயத்தின்போது அந்நாட்டு ஜனாதிபதி ஹலிமாஹ் யாகூப், பிரதமர் லீ சியென் லூங், பாதுகாப்பு அமைச்சர் நெங் எங் ஹென், நிலைபேறான தன்மை மற்றும் சுற்றாடல் அமைச்சர் கிரேஸ் ஃபு ஹாய் இயென் ஆகியோருடன் விரிவான கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதியின் சிங்கப்பூர் விஜயத்தை முன்னிட்டு நான்கு பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் பதில் பாதுகாப்பு அமைச்சராகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் தேசிய கொள்கைக்கான பதில் அமைச்சராகவும் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் அந்தத் துறைக்கான பதில் அமைச்சராகவும் சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவல் மகளிர் சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் பதில் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# பயணச்சீட்டுகளை வழங்காத இ.போ.ச. பஸ் நடத்துநர்கள்

## முறைப்பாடு செய்ய விசேட வேலைத்திட்டம்



பயணச்சீட்டு வழங்காத இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்கள் தொடர்பில் முறைப்பாடு செய்வதற்கு விசேட வேலைத்திட்டமொன்றை அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன வலியுறுத்தியுள்ளார்.

ஊழியர்களால் மேற்கொள்ளப்படும் மோசடிகளே இ.போ.சபை நட்டமடைய முக்கிய காரணம் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த மோசடிகளை கட்டுப்படுத்த விசேட வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தவுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இ.போ.ச வருமானத்தில் ஒரு பகுதியை சாரதிகளும் நடத்துனர்களும் பகிர்ந்து கொள்வதாகவும் இது அன்றாட நடவடிக்கை எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் இ.போ.ச நாளொன்றுக்கு பெற வேண்டிய 100 இலட்சம் ரூபாவை சாரதிகளும் நடத்துநர்களும் பகிர்ந்து கொள்வதாக அவர் குறிப்பிடுகின்றார்.

இ.போ.ச. பஸ்சில் ஏறிய பின்னர் பயணச்சீட்டு பெற்றுக்கொள்ளுமாறும் பயணச்சீட்டு கிடைக்காவிட்டால் புதிய முறைமையின் ஊடாக முறைப்பாடு செய்யுமாறும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# மதுரை – கொழும்பு விமான சேவை ஆரம்பம்





இந்தியாவின் ‘பட்ஜெட் கேரியர்’ ஸ்பைஸ்ஜெட் நேற்றுமுதல் (20) முதல் இந்தியாவின் மதுரைக்கும் கொழும்புக்கும் இடையே விமான சேவையை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

ஸ்பைஸ்ஜெட் கடந்த ஜூலை மாதம் அதன் அதிகாரபூர்வ ஒன்லைன் முன்பதிவு முறையில், ஓகஸ்ட் 20 முதல் வாரந்தோறும் ஆறு முறை மதுரை – கொழும்பு விமான சேவையை மீண்டும் ஆரம்பிக்கும் திட்டத்தை உறுதிப்படுத்தியது.

இதன்படி, பட்ஜெட் கேரியர் இந்தியாவின் மதுரை மற்றும் கொழும்பு கட்டுநாயக்கவில் உள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு இடையே வாரத்தில் ஆறு நாட்கள் (புதன்கிழமை தவிர) விமான சேவைகளை முன்னெடுக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



### அடித்தால்...

தமிழ் தொழிலாளர்களின் சொத்துகளை சேதப்படுத்தியமை தொடர்பில் கருத்து தெரிவித்த மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியதாவது,

அதுதான் உங்களுக்கு புரிகின்ற பாஷை என்றால் அதை பேச நாம் தயார் என்பதை பொறுப்புடன் கூறி வைக்க விரும்புகிறேன். நீதிபதி இளஞ்செழியன் தனது தீர்ப்பு ஒன்றில், தற்காப்புக்காக திருப்பியடிக்கும் உரிமையின் சட்டவரம்பு பற்றி கூறியுள்ளார். அதையே நான் இங்கு பிரதிபலிக்கிறேன். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எம்மை பேச்சுவார்த்தைக்கு அழைக்கிறார். ஆனால், நாம் பலமுறை சொல்லியும் அவரது அரசு, எமது மக்களுக்கு எதிராக பெருந்தோட்ட நிர்வாகங்கள் நடத்தும் அராஜகங்களை கண்டும் காணாமல் இருக்கிறது.

ஆகவே, பெருந்தோட்டங்களில் எமது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு உத்தரவாதம் தராவிட்டால், தமிழ் முற்போக்கு கூட்டணி ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளும் முடிவை மறுபரிசீலனை செய்யும் எனத் தெரிவித்துள்ளார்.

### வெங்காய...

பெரிய வெங்காயம் மீதான ஏற்றுமதி வரியை 40 வீதமாக இந்தியா உயர்த்தியுள்ள நிலையில், உள்நாட்டில் பெரிய வெங்காயத்தின் இருப்பு தொடர்பிலான அறிக்கையொன்றை விவசாய அமைச்சு அவசரமாகக் கோரியுள்ளது.

இது தொடர்பில் முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு விவசாயத் திணைக்கள அதிகாரிகளிடம் அமைச்சர் மஹிந்த அமரவீர பணிப்புரை வழங்கியுள்ளார்.

நீண்டகாலமாக வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வந்த வெங்காயச் செய்கை கடந்த ஏழு, எட்டு வருடங்களாக தோல்வியடைந்துள்ளதாகவும் விவசாயிகள் அந்தச் செய்கையை கைவிட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறெனினும், இலங்கையில் பெரிய வெங்காயத்தின் வருடாந்த தேவை மூன்று இலட்சம் மெற்றிக்தொன் எனவும் தேசிய உற்பத்தி நான்காயிரத்து 716 என்பதால் மிகுதி தொகை இறக்குமதி செய்யப்படுவதாகவும் விவசாய அமைச்சினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சவாலை உருவாக்கியுள்ள...

ஆசிரியர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதால் அரச பாடசாலைகளில் பாரிய வெற்றிடங்கள் உருவாகியுள்ளன. இதன் காரணமாக புதிய ஆசிரியர்களை பணிக்கு அமர்த்துவதற்கு அமைச்சரவையின் ஒப்புதலை பெற்றுக்கொள்ள வேண்டிய சூழ்நிலை கல்வியமைச்சுக்கு ஏற்பட்டுள்ளது.

அரச சுற்றறிக்கையின் பிரகாரம் ஐந்து ஆண்டு ஊதியமற்ற விடுமுறைக்கு ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம். இதன் காரணமாf அரச பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன.

நாட்டில் கடந்த ஒன்பது மாதங்களில் ஏறத்தாழ ஐயாயிரம் ஆசிரியர்களுக்கு ஐந்தாண்டுகளுக்கான ஊதியமற்ற விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டைவிட்டு வெளியேறும் ஆசிரியர்களை கல்வியமைச்சினால் தடுக்க முடியாதென அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்க தெரிவித்தார்.

புதிதாக உருவாகியுள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதிகோரி ஏற்கனவே அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக் கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, நாட்டிலுள்ள அரச பாடசாலைகளில் சுமார் 40 ஆயிரம் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுவதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அரச வைத்தியசாலைகளில் பணியாற் றும் வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேறு கின்றமையால் சுகாதாரத்துறை பெரும் சவாலை எதிர்நோக்கியுள்ள நிலையில் கல்வித் துறையும் பிரச்சினையை எதிர்நோக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### கராப்பிட்டிய ...

நிர்வாகக் குழு தெரிவித்துள்ளது.

கராப்பிட்டிய வைத்தியசாலையில் இருதய பிரிவின் விசேட வைத்திய நிபுணர் தொழிலுக்காக வெளிநாடு சென்றமையால் இந்த நிலை தோன்றியுள்ளது.

இதன் காரணமாக சிறுவர்களுக்கான இருதய அறுவை சிகிச்சைகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை நிர்வாகக் குழு தெரிவித்தது.

ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிறுவர் இருதய அறுவை சிகிச்சையை அவர் மாத்திரமே மேற்கொண்டதாகவும் அவருடைய வெற்றிடத்தினை பூர்த்தி செய்வது அவ்வளவு இலகுவாகாது எனவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் இணைச் செயலாளர் வைத்தியர் தினேஷ் யாப்பா தெரிவித்தார்.

### சர்ச்சைக்குள்ளான...

இமயமலை உள்ளிட்ட ஆன்மீகத் தலங்களுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார். அதில், தற்போது அவர் உத்தர பிரதேச மாநிலத்தில் உள்ளார். அந்த வகையில், உத்தர பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத்தை, ரஜினிகாந்த் நேற்று சந்தித்தார்.

ஆன்மீக சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ரஜினிகாந்த் யோகி ஆதித்யநாத்தை பார்த்தவுடன் அவரின் காலில் விழுந்து வணங்கினார். இந்த வீடியோ தற்போது இணையத்தில் அதிகம் பகிரப்பட்டு வருகிறது.

72 வயதான ரஜினிகாந்த், 51 வயதான யோகி ஆதித்யநாத்தின் காலில் விழுந்தது முறையல்ல எனப் பலரும் கருத்து தெரிவித்து வருகின்றனர். இருப்பினும், யோகி ஆதித்யநாத் மீதான மரியாதையின் நிமித்தம் ரஜினி இந்த செயலை செய்ததாக அவரின் ஆதரவாளர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

### கச்சதீவினால்...

கடல் விளை நிலங்களை இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதாக கடற்றொழில் அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

தமிழ்நாட்டு மீனவர்கள் மாநாட்டில் கச்சதீவை மீட்போம் என தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்த கருத்துத் தொடர்பில் அவரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தியாவில் தேர்தல் வரப்போகிற நிலையில் அரசியல் நோக்கங்களுக்காக தேர்தல்கள் வரும்போது கச்சதீவு தொடர்பில் கருத்துகள் எழுவது வழமையான செயற்பாடாகும்.

1974ஆம் ஆண்டு இருநாட்டு மீனவர்களும் இலங்கையிலும் இந்தியாவிலும் கடற்றொழிலில் ஈடுபடலாம் என ஓர் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த உடன்படிக்கை மூலம் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் பெரிய ஆறு மீன்பிடி படகுகள் இந்திய கடற்பரப்புக்குள் சென்று தொழிலில் ஈடுபட்டு வந்தன.

1974ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை 1976ஆம் ஆண்டு திருத்தப்பட்ட நிலையில், இலங்கை மீனவர்கள் இந்தியக் கடற்பரப்புக்குள்ளும் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள்ளும் நுழைய முடியாது என உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த உடன்படிக்கை மூலம் கச்சதீவு கடற்பரப்பிலிருந்து இந்தியா வெளியேறிய நிலையில் இந்தியா மீனவர்களின் மீன்பிடி வலைகளை உலர்த்துவதற்கும் கச்சதீவு அந்தோனியார் திருவிழாவில் பங்கு பெறுவதற்கும் தடை ஏற்படுத்தப்படுவதில்லை என தீர்மானிக்கப்பட்டது.

1976ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை மூலம் கச்சதீவு எமக்குரிய கடற் பரப்பாக அங்கீகரிக்கப்பட்ட நிலையில் கச்சதீவைக் காட்டிலும் 80 மடங்கு கடல் விளைநிலங்களை நாம் இழக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. இந்திய மீனவர்கள் எல்லை தாண்டிய மீன்பிடியினால் வடக்கு கடற்றொழிலாளர்கள் தொடர்ச்சியாகப் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். ஆனால், இந்திய தரப்பில் கூறும்போது மீன்பிடிக்கச் சென்ற இந்திய மீனவர்களை சிங்கள இராணுவம் மற்றும் சிங்களக் கடற்படை கைது செய்வதாகப் பிரசாரம் செய்யப்படுகிறது.

நான் இவர்களுடைய பிரசாரத்தின் உண்மை நிலை தொடர்பில் பலமுறை இந்திய மத்திய அரசுக்கும் தமிழ்நாடு அரசுக்கும் எழுத்து மூலமாகவும் வாய்மொழி மூலமாகவும் தெரிவித்துள்ளேன்.

ஆனால், வடபகுதியில் உள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாடு முதலமைச்சருக்கும் இந்தியப் பிரதமருக்கும் தமிழ்நாட்டில் இருந்து இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி தொழில் நடவடிக்கையில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் இலங்கையில் கைது செய்யப்படுகிறார்கள் என்ற உண்மையை அழுத்தமாக தெரிவிக்க வேண்டும்.

ஆகவே, கச்சதீவு விவகாரம் தேர்தல்கள் வரும்போது பேசுபொருளாக மாறுவது தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் நிலையில் அதற்கு முற்றுப்புள்ளி வைக்க தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேரில் உண்மை நிலையை தெரிவிக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

### தமிழர்களிடையே...

காரணமாகவே இந்த நாட்டிலுள்ள ஆட்சியாளர்கள் தமிழர்களை இலகுவாக தமது நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்றவாறு வழிநடத்துவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் அந்த அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன் வடக்கு, கிழக்கு, மலையகம் என்ற ஒன்றிணைந்த ஒரு கட்டமைப்பினை உருவாக்கி, நாம் ஒரே தமிழர்களாக வாழ்ந்துகொண்டிருக்கின்றோம் என்று அடையாளப்படுத்தினார் எனவும் சார்ள்ஸ் நிர்மலநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற மலையகத் தமிழ் மக்களுடைய ‘200 வருட வரலாறு’ எனும் வரலாற்று நூல் அறிமுக விழாவில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

மலையக மக்களுடைய 200வருட வாழ்க்கை வரலாற்றினை ஏன் எழுதவேண்டும் என்பதைப்பற்றி நாம் சற்றுச் சிந்திக்கவேண்டும்.

ஒரு புத்தகம் எழுதுவதாகவிருந்தால் அதற்கு ஒரு காரணம் வேண்டும்.

இந்தப் புத்தகத்தினை இரா.சுப்பிரமணியம் பல வேலைப்பளுவுக்கும் மத்தியில் ஏன் எழுதினார் என்பதைச் சிந்திக்கவேண்டும்.

ஏனெனில், கடந்த 200 வருடங்களாக மலையக மக்கள் பட்ட துன்ப துயரங்களை ஒரு பதிவாக, இன்னும் பல்லாயிரம் வருடங்களுக்குப் பிற்பாடு தாம்பட்ட துன்ப துயரங்களை தமது சமுதாயம் திரும்பிப் பார்க்கவேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக இந்தப் புத்தகம் வடிவமைக்கப்பட்டிருக்கின்றது.

இதனை வெறுமனே புத்தக வெளியீட்டு விழாவாக மாத்திரம் கருதமுடியாது.

புத்தகங்களை இங்கிருந்து வாங்கிச் சென்று, சில நாட்களுக்குப் பிற்பாடு அந்தப் புத்தகம் எங்கே என்று தெரியாத ஒரு சமூகக் கலாசார சூழலில்தான் நாம் தற்போது வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்.

புத்தகங்கள் படிக்கின்ற ஆற்றல் குறைந்து சமூகவலைத்தளங்களில் எமது பார்வைகள் அதிகமாகியிருக்கின்றன.

ஆனால், புத்தகங்களில் இருக்கின்ற அந்த வரலாறுகளை நாங்கள் நிச்சயமாகப் படிக்கவேண்டும்.

எங்களுடைய வரலாறுகள் என்னவென்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

எங்களுடைய முன்னோர்கள் எங்களுக்காகப்பட்ட துன்பங்களை நாம் அறிந்துகொள்ள வேண்டும். அவ்வாறு அறிந்துகொண்டால்தான் நாம் சரியாக வாழமுடியும்.

எங்களுக்காக எங்களுடைய முன்னோர்கள்பட்ட துயரங்களை அறிந்தால் நாம் சரியான சிந்தனையுடன், நாம் நல்ல வழிகளில் வாழ்வதற்கு எங்கள் முன்னோர்கள் செய்த தியாகங்கள், துன்பங்கள் எமக்கு வழிகாட்டியாக இருக்கவேண்டும்.

அந்தவகையில், இந்த இரா.சுப்பிரமணியம் அவர்களை நான் வாழ்த்தி நிற்கின்றேன்.

ஒரு வரலாற்றை பதிவிட்டு அனைத்து மக்களுக்கும் சென்று சேரக்கூடியவகையில் இந்தப் புத்தகத்தினை அவர் அமைத்திருக்கின்றார்.

கடந்த 2009ஆம் ஆண்டுக்கு முன்பு நாம் இந்த மண்ணில் சுதந்திரமாக எமது கலாசார அடிப்படையில், மதஅடிப்படையில், இன அடிப்படையில், மொழி அடிப்படையில் ஒரு கௌரவமான வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருந்தோம்.

ஆனால், தற்போது பெரும்பான்மை இனத்தவர்கள் எங்களை வழிநடத்துகின்ற, எம்மை துச்சமாக நினைக்கின்ற அளவுக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய பகுதிகளிலுள்ள தமிழ் மக்களிடையிலும் தமிழ் மக்கள் பிரதிநிதிகளிடையிலும் இருக்கின்ற ஒற்றுமையின்மை காரணமாகவே இந்த நாட்டிலுள்ள ஆட்சியாளர்கள் எம்மை இலகுவாக தமது நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்றவாறு வழிநடத்துகின்றனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வடக்கு, கிழக்கு, மலையகம் என்ற ஒன்றிணைந்த ஒரு கட்டமைப்பினை உருவாகியிருந்தார். அத்தோடு மலையகத்தில் பொங்குதமிழ் நிகழ்வொன்று அப்போது மேற்கொள்ளப்பட்டது.

வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் பொங்கு தமிழ் மேற்கொள்வதனூடாக நாம் மூன்று பகுதிகளிலும் ஒரே தமிழர்களாக வாழ்ந்துகொண்டிருக்கின்றோம் என்று அன்று பிரபாகரன் அடையாளப்படுத்தினார்.

ஆனால் தற்போது வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் ஆகிய மூன்று பகுதிகளையும் உள்ளடக்கிய கட்டமைப்பு இல்லாமல், வடக்குக்கு வேறாகவும் கிழக்குக்கு வேறாகவும் மலையகத்துக்கு வேறாகவும் தமிழ் மக்கள் பிரிந்து நிற்கின்றனர்.

இது எமது முன்னோர்களுக்கு நாம் செய்கின்ற துரோகமாகவே பார்க்கிறேன்.

முடிந்தவரையில் நாம் அனைவரும் ஒற்றுமையாகப் பயணிப்போம் - என்றார்.

### இறைச்சிகளில்...

பரிசோதகர்களின் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடும் வறட்சி நிலவும் நிலையில் வனவிலங்குகள் நச்சு வைத்து வேட்டையாடப்படுகின்றன என பொது சுகாதாரப் பரிசோதகர்களின் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிலவும் வறட்சியுடனான காலநிலையுடன் விசேடமாக வில்பத்து, யால மற்றும் உடவளவை போன்ற பாதுகாக்கப்பட்ட சரணாலயங்கள் மற்றும் அதனை அண்டிய வனப்பகுதிகளில் வாழும் விலங்குகளுக்கு அருந்துவதற்கான நீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மிகவும் குறைந்த அளவிலான இப் பகுதியில் நீர் கிடைக்கிறது.

இப்பகுதிகளில் நீர் அருந்தவரும் வனவிலங்குகள் நஞ்சு கலந்தும், தீ வைத்தும் அவை கொல்லப்படுவதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

இவ்வாறு கொல்லப்படும் வனவிலங்குகளின் இறைச்சி நல்ல இறைச்சி எனக்கூறி சுற்றுலாப் பயணிகள் மற்றும் குறித்த பகுதியை அண்டிய பிரதேசத்தில் விசேடமாக மாத்தறை, ஹம்பாந்தோட்டை, புத்தளம், அநுராதபுரம், மட்டக்களப்பு மற்றும் பொலன்னறுவை போன்ற பிரதேசங்களுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகளுக்கு நல்ல இறைச்சி எனக்கூறி விற்பனை செய்யப்படுகிறது.

இவ்வாறு நஞ்சு கலந்து கொல்லப்படும் வனவிலங்குகளின் இறைச்சியை உண்பதன் மூலம் உயிராபத்துகள் ஏற்படலாம். அதேபோன்று உடல் உபாதைகள் ஏற்படலாம். அவை தீர்வு காணமுடியாத நோயாகக்கூட மாறலாம்.

இதனால் நீங்கள் தெரியாத பிரதேசங்களுக்குச் சென்று இறைச்சி உண்பதை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம் – இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### நல்லூர் கந்தன்...

இந்தப் போக்குவரத்து தடை எதிர்வரும் செப்டெம்பர் 16ஆம் திகதிவரை நீடிக்குமென யாழ்ப்பாண மாநகர சபை அறிவித்துள்ளது.

நல்லூர் ஆலய சுற்று வீதிகள் மூடப்பட்டிருக்கும் சமயங்களில் பருத்தித்துறை வீதி வழியாக வரும் வாகனங்கள் யாழ்ப்பாண மாநகர சபைக்கு முன்பாக உள்ள வீதியால் பயணித்து யாழ்ப்பாண நகரை அடைய முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, நல்லூர் கந்தசுவாமி ஆலய இரதோற்சவம் மற்றும் சப்பறத் திருவிழாக்களின் போது கச்சேரி நல்லூர் வீதியின் ஊடாகவே பயணிக்க முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் ஆலய சுற்றுவீதிகளில் வசிப்பவர்கள் வாகனங்களை உட்கொண்டு செல்ல யாழ்ப்பாண மாநகர சபையினால் நிபந்தனையுடனான விசேட அனுமதி அட்டை வழங்கப்பட்டுள்ளது.

நல்லூர் ஆலய வெளி வீதியைச் சூழ ஆலய நிர்வாகத்தினரால் சிவப்பு, வெள்ளை வர்ணக் கொடிகளால் எல்லையிடப்படும் வீதித்தடை பகுதிகளினுள் மாநகர சபையின் நீர் விநியோக வண்டி மற்றும் கழிவகற்றும் வண்டியை தவிர எக்காரணம் கொண்டும் வாகனங்கள் உட்செல்ல முடியாது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### வறட்சியினால்...

இதேவேளை, சூழல் வெப்பமடைவதனால் மன அழுத்தம் அதிகரிக்கும் சாத்தியமுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சூழல் வெப்பமடைதல் அதிகரித்துச்செல்லும் நிலையில் மன அழுத்தமும் உக்கிரமடையும் நிலைமை அதிகரித்துச் செல்வதாக கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் விசேட உளநல வைத்திய நிபுணர் ரூமி ரூபன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அதிக வெப்பத்துடனான காலநிலை தொடரும் போது, ஏற்கனவே நோய்களால் பாதிக்கப்பட்டவர்களின் உளநலம் மேலும் சிக்கலுக்குள்ளாகும் நிலை காணப்படுகிறது.

மருந்துகளை உட்கொள்வோர் இவ்வாறான அதிக வெப்பத்துடனான காலப்பகுதியில் அதிகளவு நீரை பருகுவது அத்தியாவசியமாகும்.

உடலில் நீரின் அளவு குறையுமிடத்து அதனால் ஏற்படும் பாதிப்புகள் அதிகரிக்கும்.

எனவே, அனைத்து தரப்பினரும் இது தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டியது கட்டாயமாகும் என வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

நாட்டில் நிலவும் கடும் வறட்சியால் இரத்தினபுரி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, புத்தளம், குருணாகல், யாழ்ப்பாணம், மன்னார் முல்லைத்தீவு, வவுனியா, பதுளை, மொனராகலை, ஹம்பாந்தோட்டை, கம்பஹா மற்றும் மாத்தளை உள்ளிட்ட 15 மாவட்டங்களில் 60 ஆயிரத்து 990 குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 10ஆயிரத்து 798 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், குருணாகல், இரத்தினபுரி, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையிலானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் யாழ்ப்பாணத்தில் 21 ஆயிரத்து 999 குடும்பங்களைச் சேர்ந்த 70ஆயிரத்து 238 பேரும் குருணாகலில் 4ஆயிரத்து 433 குடும்பங்களைச் சேர்ந்த 14ஆயிரத்து 752 பேரும் இரத்தினபுரியில் 10ஆயிரத்து 50 குடும்பங்களைச் சேர்ந்த 41ஆயிரத்து 876 பேரும் மட்டக்களப்பில் 8ஆயிரத்து 892 குடும்பங்களைச் சேர்ந்த 29ஆயிரத்து 508 பேரும் அம்பாறையில் 7ஆயிரத்து 739 குடும்பங்களைச் சேர்ந்த 25ஆயிரத்து 891 பேரும் திருகோணமலையில் 2ஆயிரத்து 320 குடும்பங்களைச் சேர்ந்த 7ஆயிரத்து 737 பேரும் குடிநீர் உள்ளிட்ட வறட்சியின் பெரும் பாதிப்புகளை எதிர்நோக்கியுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யால தேசிய பூங்காவுக்கு விஜயம்








ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் (19) காலை யால தேசிய பூங்காவுக்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டார். இங்கு வருகை தரும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான பயணச்சீட்டுகளை இணையதளத்தில் பெற்றுக்கொள்வதற்கான முறையொன்றை அதிகப்படுத்துவது குறித்து ஜனாதிபதி அதிகாரிகளுக்கு விளக்கமளித்தார். நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக பூங்காவிலுள்ள வறண்ட குளங்களுக்கு நீர் வழங்கும் வேலைத்திட்டங்களை ஜனாதிபதி பார்வையிட்டார். அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

# புதிய மாற்றத்துடன் சுற்றுலாத்துறையில் முன்னோக்கிச் செல்வதற்கு எதிர்பார்ப்பு

## ஒத்துழைப்போருக்கு உதவிகளை வழங்க அரசாங்கம் தயார் என்கிறார் ஜனாதிபதி




நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான இலக்குகளை விரைவாக அடையக்கூடிய, முன்னணி துறையாக சுற்றுலாத்துறை காணப்படுவதால், அதனை மேம்படுத்துவதற்கான பல முக்கிய தீர்மானங்களை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஹில்டன் ஹோட்டல் குழுமத்தின் அதி சொகுசு ஹோட்டலான (Hilton Yala Resort) ஹோட்டலை நேற்றுமுன்தினம் (19) பிற்பகல் திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"இன்று இந்த யால பிரதேசத்தில் உயர்தர சொகுசு ஹோட்டலை திறந்து வைப்பது மகிழ்ச்சியளிக்கிறது. இதனால் அதிக நுகர்வுத் திறன் கொண்ட சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்க்க முடியும் என்பதோடு, முன்னேற்றத்துக்கான வாய்ப்பும் உருவாகும்.

சுற்றுலாத்துறையை ஊக்குவித்து அதை முன்னோக்கிக் கொண்டு செல்வதே எமது நோக்கமாகும்.இப்பகுதிகளுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளையும் மேம்படுத்த வேண்டும். இந்த யால பிரதேசத்தின் அபிவிருத்திக்கான திட்டத்தை முன்வைக்குமாறு வனஜீவராசிகள் - வன பாதுகாப்பு அமைச்சர், சுற்றுலா அமைச்சர் மற்றும் அந்த இரண்டு அமைச்சுகளின் அதிகாரிகளிடமும் நான் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு மேலதிகமாக, கல்ஓயா, மாதுருஓயா, சோமாவதிய, மின்னேரியா மற்றும் வஸ்கமுவ போன்ற இடங்கள் குறித்தும் அவதானம் செலுத்த வேண்டும்.

சுற்றுலாப் பயணிகள் கொழும்பில் இருந்து படகில் ஏறி புத்தளம் வந்து ஓரிரு நாட்கள் வில்பத்துவில் தங்கிவிட்டு திரும்பும் வகையில் வசதிகளை மேம்படுத்த வேண்டும்.இந்த நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்க வேண்டும். மேலும், சுற்றுலா மூலம் பெறப்படும் வருமானத்தை நான்கு முதல் ஐந்து மடங்குகளாக அதிகரித்துக்கொள்ள வேண்டும்.

நான் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றதன் பின்னர், நாட்டைக் கடன் பொறியிலிருந்து மீட்டெடுப்பது மட்டுமன்றி, வருமானத்தை ஈட்டுவதற்கான புதிய வழிகளை உருவாக்கும் பொறுப்பும் என்னைச் சார்ந்திருந்தது. தொழிற்சாலைகள் மற்றும் விவசாயத் துறையில் வருமானம் ஈட்ட அதிக காலம் தேவைப்படும். ஆனால், சுற்றுலாத்துறையில் விரைவில் அந்த இலக்கை அடைய முடியும்.

அதனால் வருமானம் ஈட்டி, மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அதேநேரம், சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதே எமது நோக்கமாகும். இவ்வருட இறுதிக்குள் நாட்டில் உள்ள சுற்றுலா விடுதிகளிலும் சுற்றுலாப் பயணிகளால் நிரம்பி வழியும் அளவுக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிக்கும். அதுவே தற்போதும் நடத்துகொண்டிருக்கிறது. அடுத்த வருடத்தில் சுற்றுலாப் பயணிகள் நிரம்பி வழிவதற்கு மேலதிகமாக அதனால் கிடைக்கும் வருமானத்தையும் இரட்டிப்பாக்கிக்கொள்ள முடியும்.

இந்த வருடம் கண்டியில் நடைபெறவுள்ள தலதா பெரஹெர மற்றும் ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் காரணமாக இந்நாட்டில் உள்ள சுற்றுலா விடுதிகள் செப்டெம்பர் மாதத்தில் நிரம்பி வழியும். உலகப் புகழ்பெற்ற கலைஞர்கள் மற்றும் இசைக்கலைஞர்கள் கிறிஸ்மஸ் காலத்தில் இலங்கைக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேற்கத்தேய நாடுகளின் முக்கிய இசைக்கலைஞர்களில் ஒருவரான Andrey Mucherஎதிர்வரும் ஜனவரி மாதம் இந்நாட்டுக்கு வருகை தரவுள்ளார் என்பது தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், காலி இலக்கிய விழா உள்ளிட்ட பல நிகழ்ச்சிகள் நாடு முழுவதும் நடைபெறுகின்றன. இதன் மூலம் அதிகளவான சுற்றுலாப் பயணிகளை இந்நாட்டுக்கு வரவழைத்து நாட்டுக்குத் தேவையான வருமானத்தை ஈட்டுவதற்கு எதிர்பார்க்கின்றோம். மேலும், இதனை வருமான வழியாக பார்க்கும் அதேநேரம், வேலைவாய்ப்புக்கான களமாகமாகவும் மாற்ற வேண்டும். அதற்காக இளைஞர் - யுவதிகளை அதிகளவில் பயிற்றுவிக்க வேண்டும். ஒவ்வொருவரும் தங்கள் எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் அதேநேரம், மேற்படி செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியமாகும்.

நாட்டின் சுற்றுலாத்துறையில் துரித அபிவிருத்தியை ஏற்படுத்த பல புதிய முன்மொழிவுகள் கிடைத்துள்ளன. அந்த வகையில், தங்களது வீடுகளின் அறைகளில் இரண்டை சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கி, உயர் வகையில் உபசரிப்புகளை வழங்கி அதனால் 100 டொலர்களை ஈட்டிக்கொள்ளும் இயலுமையைக் கொண்டிருந்தால் அந்தச் செயற்பாடுகளை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான உதவிகளை அரசாங்கம் வழங்கும் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பேராசிரியர் மைத்ரி விக்கிரமசிங்க, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் செயலாளர் எச்.பீ.பீ.ஹேரத், சுற்றுலா ஊக்குவிப்பு செயலணியின் தலைவர் ஷலக கஜபாகு, இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் தலைவர் ஷிராந்த பீரிஸ், ஹில்டன் குழுமத்தின் சிரேஷ்ட முகாமைத்துவப் பணிப்பாளர் (தென்கிழக்கு ஆசியா) ஜெம் மீட், சிரேஷ்ட முகாமைத்துவப் பணிப்பாளர் (ஆசிய மாற்றும் அவுஸ்திரேலியா) ஜோஸ் ரொபர்ட்ஸ்(Josh Roberts),இலங்கை ஹில்டன் ஹோட்டல் குழுமத்தின் நிறைவேற்று அதிகாரி மனேஸ் பெர்னாண்டோ, ஹில்டன் யால ரிசோர்ட் நிறைவேற்று அதிகாரி கீதாஞ்சலி சக்ரவர்த்தி, Melwa Hotels & Resorts Private Limited நிறுவனத்தின் பணிப்பாளர் முருகா பிள்ளை உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# மின்சாரம் தாக்கி பெண் உயிரிழப்பு

பெல்லன்வில ரஜமஹா விகாரையில் இடம்பெற்ற ரந்தோலி ஊர்வலத்தை பார்வையிட வந்த பெண் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாக பொரலஸ்கமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

தெஹிவளை, அத்திடிய பகுதியைச் சேர்ந்தஸ்வர்ண குமாரி பிலிகம (61வயது) என்ற பெண்ணே மேற்படி சம்பவத்தில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

மின்சாரத் தாக்குதலுக்கு இலக்கான பெண் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.பொரலஸ்கமுவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆவணி மாதம் 04 ஆம் நாள் திங்கட்கிழமை**

**மேஷம்:** நினைத்த காரியத்தில் வெற்றி கிட்டும். நோய்,கடன், எதிரி இவை எதுமே பாதிப்பை ஏற்படுத்தாது.

**ரிஷபம்:** புத்திரர்களால் தொல்லையும் கவலையும் தோன்றும்.மனம் கண்டபடி அலையும்.

**மிதுனம்:** எதிர்ப்பாராத விபத்துகள் ஏற்படலாம், வீடு, வாகனம் விற்பது வாங்குவது கவனம்.

**கடகம்:** நீங்கள் கேட்காமலேயே நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். துணிச்சலால் அனைத்தையும் வெற்றி கொள்வீர்கள்.

**சிம்மம்:** குதர்க்கமான பேச்சால் அவமானம், அபகீர்த்திகள் ஏற்படும். குடும்பத்தில் குழப்ப நிலைகள் உருவாகும்.

**கன்னி:** குடும்பத்தில் மங்கள காரியங்கள் நடைபெற்று மகிழ்ச்சி பிறக்கும். நோயிலிருந்து விடுதலை அடைவீர்கள்.

**துலாம்:** தேவையற்றவர்களின் நட்பால் தொல்லைகள் உருவாகும். உணவு, உறக்கம் தேடிப் போனாலும் கிடைக்காது.

**விருச்சிகம்:** தொழில் வியாபாரத்தில் அதிக லாபங்களைப் பெறுவீர்கள். எதிர்ப்பாராத தன வரவால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**தனுசு:** தொழில் மூலமாக பதவி உயர்வுகள், சம்பள உயர்வுகள் அமையும். புதிய பதவிகள் வந்து சேரும்.

**மகரம்:** பூர்வீக சொத்துகளால் வில்லங்கம் ஏற்படும். தந்தைக்கும் உங்களுக்குமிடையிலான உறவு பாதிக்கப்படும்.

**கும்பம்:** திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் மந்த நிலையை அடையும். வாய்ப் பேச்சால் வீண் பிரச்சினைகள்.

**மீனம்:** கூட்டு வியாபாரத்தில் கவனம் வேண்டும், மனக்கட்டுப்பாட்டுடன் தொழிலாற்றுவது நன்மை.

**திதி:**பஞ்சமி பி.இ.2.00 வரை பின் ஷஷ்டி
**நட்சத்திரம்:**சித்திரை முழுவதும்
**யோகம்:**மரண யோகம் முழுவதும்
**வார சூலம்:**கிழக்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது
**நல்லநேரம்:** பி.ப. 12.08– 12.38 மணிவரை
**ராகுகாலம்:** 7.38 – 9.08 மணி வரை
**எமகண்டம்:** 10.38– 12.08 மணி வரை
**குளிகை:** 1.38 – 3.08 மணி வரை
**சந்திராஷ்டமம்:** கும்ப - மீன ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும்
**தனஅதிஷ்டம்:** ரோஹிணி,அத்தம், திருவோணம் (பிறந்தவர்களுக்கு)
**விஷேட தினம்:** சோமவார விரதம் - நாக பஞ்சமி

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிமின் வாழ்க்கைச் சரித்திரம்: நூல் கையளிப்பு

பேருவளை நிருபர்

தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகரும் பிரபல சமூக சேவையாளருமான கலாநிதி நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிமின் வாழ்க்கைச் சரித்திரம் தொடர்பாக அரபு மொழியில் வெளியிடப்பட்டுள்ள "மஸீரத் ஹிபா" (போராட்டத்தின் அணி) எனும் நூலின் பிரதியொன்றை ஓமான் நாட்டின் முன்னாள் தூதுவரும் வெளிநாட்டு அலுவலக அமைச்சின் பணிப்பாளருமான அஷ் ஷெய்க் அமீர் அஜ்வாத் (நளீமி) இடம் வெளிவிவகார அமைச்சில் வைத்து கையளிக்கப்பட்டது.

ஏற்கனவே இவர் தொடர்பான வாழ்க்கைச் சரித்திர நூல் தமிழ் மொழியில் வெளியிடப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

கலாநிதி நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிமின் கல்வி, சமய, சமூக, ஆன்மீக, பொதுப் பணிகள் தொடர்பில் அரபு மொழியில் வெளியிடப்பட்டுள்ள மேற்படி நூல் அபுதாபியில் உள்ள முக்கிய நூல் நிலையங்களுக்கும் இலங்கையில் உள்ள அரபு கலாசாலைகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.







நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில், நல்லூர் வரவேற்பு வளைவில் சேவல் கொடி கட்டும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

# கஞ்சா கலந்த மாவா பாக்குடன் இளைஞர்கள் இருவர் கைது

பு.கஜிந்தன்

கஞ்சா கலந்த மாவா பாக்குடன் இளைஞர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஆனைக்கோட்டை மூன்றாம் கட்டை பகுதியில் வைத்து அவர்கள் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து ஆயிரத்து 500 மில்லி வீற்றர் கசிப்பு மற்றும் 21 கிராம் 450 மில்லிகிராம் கஞ்சா கலந்த மாவா போதைப்பொருள் என்பனவும் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் மேலும் கூறினர்.

யாழ்ப்பாணப் பிராந்திய பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர். சந்தேக நபர்கள் இருவரும் யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# காதல் ஜோடியின் முதல் சந்திப்பே விவகாரமாகியது

## இருவருக்கும் விளக்கமறியல்!

குருநாகல், அத்துகல பிரதேசத்தில் காட்டுக்கு தீ வைத்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட காதலர்கள் இன்று திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.குருநாகல் நீதவான் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

அத்துகல மலை உச்சியில் உள்ள புத்தர் சிலையை பார்வையிடுவதற்காக குறித்த காதலர்கள் நேற்று அங்கு சென்றுள்ளனர். இருவருக்கும் இடையிலான முதல் சந்திப்பு இதுவாகும். இதன்போது காதலனின் சட்டைப் பையில் தீப்பெட்டி இருப்பதை அவதானித்து, அவர் புகைப்பிடிப்பவரா என காதலி கேள்வியெழுப்பியுள்ளார். காதலன் அதை மறுத்துள்ளார். தீப்பெட்டியை காதலி வாங்கிய போது, அதற்குள் 2 குச்சிகள் இருந்துள்ளன.

யுவதி தீப்பெட்டியில் இருந்த இரண்டு குச்சிகளையும் கொளுத்தி வீசியுள்ளார். இதனால் இங்கு தீ பரவ ஆரம்பித்தது.இதனைக் கண்ட பிரதேசவாசிகள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து, குருநாகல் மாநகரசபை ஊழியர்களின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.தீயினால் அழிவடைந்த



பிரதேசம் 3 ஏக்கர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தீ பரவியதால் பதற்றமடைந்த காதலர்கள் அங்கிருந்து தப்பியோடியபோது அவர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.கைது செய்யப்பட்டவர்கள் 24, 20 வயதுகளையுடைய மாத்தளை மற்றும் மஹவ பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.குறித்த இளைஞன் இராணுவ வீரர் என பொலிஸார் தெரிவித்தனர்.இந்நிலையில், இருவரும் குருநாகல் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது அவர்கள் இருவரையும் இன்று திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

# வவுனியாவில் தாக்குதல்; இளம் குடும்பஸ்தர் மரணம்: ஒருவர் கைது



வவுனியாவிலுள்ள மதுபானசாலையொன்றில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட இளம் குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி நேற்று (20) உயிரிழந்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவத்தில் வவுனியா, மகாறம்பைக்குளம், காந்தி வீதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான பிரதீபன்(தீபன்) என்பவரே உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

வவுனியா, பூந்தோட்டம் பகுதியிலுள்ள மதுபானசாலைக்கு கடந்த வெள்ளிக்கிழமை இரவு சென்றிருந்த இளம் குடும்பஸ்தரை அங்கு மது அருந்திக் கொண்டிருந்த இருவர் அழைத்து தாக்கியுள்ளனர். இவ்விடயம் தொடர்பாக அங்கிருந்தவர்கள் தாக்குதலுக்கிலக்கானவரின் வீட்டுக்கு தகவல் வழங்கியதையடுத்து, அவரது தாயார் வருகை தந்து அவரை வவுனியா வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளார். இந்நிலையில், அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த குறித்த குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி நேற்று (20) உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் தடயவியல் பொலிஸாரின் துணையுடன் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர் எனக் கருதப்படும் பூந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய பிரதான சந்தேக நபரை கைதுசெய்துள்ளனர்.

இந்நிலையில், சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு நேற்று (20) பிற்பகல் சென்ற பதில் நீதவான் தி.திருஅருள் ஸ்தல விசாரணைகளை மேற்கொண்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023 ஒகஸ்ட் 21ஆம் திகதி, திங்கட்கிழமை

# பெண்கள் மீதான வன்முறைகள்!

இலங்கையில் பெண்களுக்கு எதிரான குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளதாகவும், கடந்த மூன்று வருடங்களில் (2020, 2021, 2022) 263 பெண்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் 2022 ஆம் ஆண்டிற்கான இலங்கை பொலிஸ் திணைக்களம் வெளியிட்டுள்ள செயல்திறன் அறிக்கை தெரிவிக்கிறது.

கடந்த ஆண்டு (2022) 102 பெண்கள் கொல்லப்பட்டனர். 2021 இல் 79 பெண்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும், 2022 இல் கொல்லப்பட்ட பெண்களின் எண்ணிக்கை அந்த ஆண்டை விட 29 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் இந்த அறிக்கை காட்டுகிறது. 2020இல் கொல்லப்பட்ட பெண்களின் எண்ணிக்கை 82.

மேலும், பெண் கொலைகள், பாலியல் வல்லுறவு, கொலை முயற்சி, கடுமையான காயம், கடுமையான பாலியல் துஷ்பிரயோகம், துஷ்பிரயோகம், கடத்தல், உடலுறவுக்கு பெண்களை வழங்குதல் போன்றவற்றுடன் கடந்த ஆண்டில் பெண்களுக்கு எதிரான 600 வன்முறைக் குற்றங்கள் பதிவாகியுள்ளன.

2021 ஆம் ஆண்டில் பெண்களுக்கு எதிரான 568 வன்முறைக் குற்றங்கள் பதிவாகியுள்ளன, 2020 ஆம் ஆண்டில் பெண்களுக்கு எதிரான வன்முறைக் குற்றங்களின் எண்ணிக்கை 595 ஆக இருந்தது.

கடந்த மூன்று ஆண்டுகளில் (2020, 2021, 2022), 606 பாலியல் வல்லுறவுகள் பதிவாகியுள்ளன.

இருப்பினும், 2020 ஆம் ஆண்டை ஒப்பிடுகையில், கடந்த இரண்டு ஆண்டுகளில் பாலியல் வல்லுறவு குற்றங்கள் குறைந்துள்ளன. ஆனால், பெண்கள் கொல்லப்படுவது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

கொல்லப்பட்ட பெண்களில் பெரும்பாலானோர் பட்டப்பகலில் கொல்லப்பட்டுள்ளனர். அநேகமாக அவர்களுடைய வீட்டில் வைத்தே கொல்லப்பட்டனர்.அது மட்டுமின்றி, பெண்கள் பெரும்பாலும் தங்கள் கணவன், காதலன் அல்லது கள்ளக்காதலனால், முறையற்ற உறவுகளால் வந்த நபர்களால் கொல்லப்படுகின்றனர்.

ஒவ்வொரு 11 நிமிடங்களுக்கும் ஒரு பெண் அல்லது சிறுமி அவரது சொந்தக் குடும்பத்தில் உள்ள ஒருவரால் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்படுவதாக போதைப்பொருள் குற்றங்களுக்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகம் வெளியிட்ட புள்ளிவிவரம் சொல்கிறது. அறிமுகமான நம்பகமான நபர்களால் பெண்கள் மற்றும் சிறுமிகள் பாதிக்கப்படுவது, பாலின அடிப்படையிலான வன்முறையின் தீவிர வெளிப்பாடுகளில் ஒன்றாகும் என்பதை அது எடுத்துரைக்கின்றது.

உலக பெண்கள் மீதான வன்முறை ஒழிப்பு நாள் கொடுமை மற்றும் வன்முறை எதிர்ப்பு நாள் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 25 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது. பெண்களின் குரல்களை எழுப்புவதற்கும், குடும்ப வன்முறை, பாலியல் வன்கொடுமைகள், பெண்கள் மீது சுமத்தப்படும் அனைத்து விதமான செயல்கள் போன்றவற்றைக் கண்டிப்பதற்கும் கடைப்பிடிக்கப்படும் இந்நாளில் மட்டும் பெண்கள் மீது அதீத அக்கறை காட்டப்படுகிறது. ஆனால், வருடத்தின் இதர நாட்கள் பெண்களின் பாதுகாப்பைப் பற்றி அக்கறை செலுத்துவது யார்?

கொவிட் -19 பெருந்தொற்றுக் காலத்திற்குப்பின், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான அனைத்து வகையான வன்முறைகளும் குறிப்பாக, குடும்ப வன்முறைகளும் தீவிரமடைந்துள்ளதையும் காணமுடிகின்றது. பொருளாதார நெருக்கடிகளும் அதனால் குடும்பங்களில் ஏற்படும் மன அழுத்தங்களும் இவற்றுக்கு பிரதான காரணங்களாகக் கருதப்படுகின்றன.ஆனாலும் இந்த விடயங்களால் ஏற்படும் எதிர்வினை பெண்கள் மீது பாய்வதில் எந்த நியாயமும் இல்லை.

ஐ.நா. மட்டுமல்ல, உலகம் முழுவதும் உள்ள பெண்ணிய அமைப்புகளும் பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான வன்முறையை ஒழிக்கப் பல்வேறு விதங்களில் தொடர்ந்து போராடி வருகின்றன. இவற்றின் விளைவாகக் குறிப்பிட்ட சதவீதப் பெண்கள் விழிப்புணர்வு பெற்றாலும், வன்முறை குறைந்தபாடில்லை. மாறாக, நாளுக்கு நாள் அதிகரித்து வருவதுடன் புதுப்புது வடிவமும் எடுத்துவருகிறது. உடல் ரீதியான, உளவியல் ரீதியான வன்முறை போன்றவற்றின் நீட்சியாகத் தற்போது இணையவழித் தாக்குதல்களும் அதிகரித்து வருகின்றன. இத்தனைக்கும் பதிவு செய்யப்படும் குற்றங்கள், தரவுகள் போன்றவற்றின் அடிப்படையில்தான் நாம் வினையாற்றவேண்டியுள்ளது.

தன் மீது நிகழ்த்தப்படும் வன்முறையை எந்த இடத்திலும் பதிவுசெய்யாத பெண்கள் நம்மிடையே அதிகம். இவர்களில் படித்தவர், படிக்காதவர் என்கிற பேதமெல்லாம் இல்லை. சமூகத்தில் எந்த நிலையில் இருந்தாலும் பெண் என்கிற ஒரே காரணத்துக்காக ஒடுக்கப்படுகிறவர்கள் இங்கே ஏராளம். அதிலும் வன்முறைக்கு எளிதில் இலக்காகும் வகையில் பலவீனமான நிலையில் இருக்கும் குழந்தைகள், வயதானவர்கள், மாற்றுப் பாலினத்தவர், அகதிகள், புலம்பெயர்ந்தோர், சிறுபான்மையினர், ஆதரவற்றோர், மாற்றுத் திறனாளிகள் போன்றோர் அதிக அளவில் வன்முறைக்கு ஆளாக்கப்படுகிறார்கள்.

பெண்கள், குழந்தைகள் மீது நிகழ்த்தப்படுகிற வன்முறையைப் பாலின பேதத்தின் வெளிப்பாடு என்று குறுக்கிவிட முடியாது. அது பெண்களைப் பாதிப்பது மட்டு மல்லாமல், பாலினச் சமத்துவத்தை அடையும் உலகளாவிய நோக்கத்துக்குப் பெரும் தடையை ஏற்படுத்துவதுடன் ஒட்டுமொத்த நாட்டின் வளர்ச்சியையும் சேர்த்தே பாதிக்கிறது.வன்முறைக்கு ஆளாக்கப்படும் பெண்ணைப் பற்றி மட்டுமே பேசும் சமூகம், அந்தப் பெண்ணின் மீது வன்முறையை நிகழ்த்திய ஆணைக் கண்டுகொள்வதில்லை.

பாதிக்கப்பட்ட பெண்ணையே குற்றவாளிபோல் சித்திரித்து அவள் மீது களங்கத்தைச் சுமத்தும் சமூக மனநிலையே சட்டத்தின் உதவியை நாட விடாமல் பெண்களைத் தடுக்கிறது. தவிர, நீதி கிடைப்பதற்கான நெடிய போராட்டத்தில் ஏற்படும் அலைக்கழிப்பும் குற்றவாளிக்குத் தண்டனையைப் பெற்றுத்தர முடியாத அதிகாரப் படிநிலையும் பெண்களைச் சோர்வுறச் செய்கின்றன. போராடத் துணிகிற பெண்கள் அனைவரும் வெற்றிபெற்றுவிடுவதில்லை என்கிறபோதும், தன்னைப் போலவே பாதிக்கப்படும் பெண்களுக்கு அவர்கள் நம்பிக்கை அளிக்கத் தவறுவதில்லை.

சமூகத்தின் அனைத்துத் தரப்புப் பெண்களுக்கும் சட்டத்தின் உதவி எளிதில் கிடைக்கும் வகையில் செயற்பட வேண்டியது அரசின் கடமை. இத்தனை பெண்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் என்று தெரிவித்து அதனை செய்தியாகக் கருதி கடந்துவிடாமல் எதிர்காலத்தில் அப்படியானவற்றைத் தடுக்க ஆவன செய்யவேண்டும்.அதுவே அவசிய - அவசர தேவை.

## இன்றைய நாளில்...

- 1821 – ஜார்விஸ் தீவு கண்டுபிடிக்கப்பட்டது.
- 1888 – முதலாவது வெற்றிகரமான கூட்டல் கருவி அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1911 – லியனார்டோ டா வின்சியின் மோனா லிசா ஓவியம் பாரிசின் இலூவா அருங்காட்சியகத்தில் இருந்து திருடப்பட்டது.
- 1920 – ஏ. சபாபதி ஓய்வு பெற்றதை அடுத்து சேர் அ. கனகசபை இலங்கை சட்டவாக்கப் பேரவைக்குத் தமிழ்ப் பிரதிநிதியாகத் தெரிவானார்.
- 1963 – தெற்கு வியட்நாமின் குடியரசு இராணுவத்தினர் நாட்டின் பௌத்தத் தலங்களை அழித்து நூற்றுக்கணக்கானோரைக் கொன்றனர்.
- 1983 – பிலிப்பைன்ஸ் எதிர்க்கட்சித் தலைவர் பெனீனோ அக்கீனோ மணிலாவில் கொலை செய்யப்பட்டார்.
- 1988 – நேபாள-இந்திய எல்லைப்புறத்தில் 6.9 அளவு நிலநடுக்கம் இடம்பெற்றதில் 1,450 பேர் வரை இறந்தனர்.
- 1993 – நாசா மார்ஸ் ஒப்சர்வர் விண்கலத்துடனான தொடர்பை இழந்தது.



# முதியோர் நலனில் சித்த மருத்துவம்

■ சோ.தில்லைவாணன்

“உடம்பார் அழிவின் உயிரார் அழிவர்” என்பது திருமூலரின் வாக்கு. திருமந்திரத்தின் இந்த வரிகள் மருத்துவ உலகிற்கும் ஆரோக்கியத்தை தேடும் முதுமைக்கும் கிடைத்த புதையல் என்றே கூறலாம். உயிருக்கு ஆதாரம் உடல் தான். ஏனெனில், உடல் முதுமையில் படும் துன்பங்கள் ஏராளம். அத்தகைய துன்பத்தின் இறுதியில் தான் இறப்பு எனும் நிலையை அடைகிறது. எனவே, முதுமையில் உடல் ஆரோக்கியத்தின் மீது கூடுதலாக கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

ஆரோக்கியத்திற்கு சவாலாக இருக்கும் முதுமையில் அடுக்கடுக்காய் வரும் உடல் உபாதைகளால் - அதிகரித்துக்கொண்டே செல்லும் மருந்து -மாத்திரைகளால் சளைத்துப் போய் விடுவது உடல் மட்டுமல்ல, மனமும் தான். நம் பாட்டிமார்கள் வெற்றிலைப் பெட்டியை தம்முடன் வைத்துக்கொண்டு அவ்வப்போது இடித்து வாயிலிட்டு மென்று அதன் சாற்றை விழுங்கிய காலத்தில் இருந்த ஆரோக்கியம், உணவுப் பொட்டலங்களை வீட்டுக்கு வரவழைத்து உண்ணும் இன்றைய நவீன யுகத்தில் இல்லை. மாத்திரைப் பெட்டியின் அளவு அதிகரிப்பதே தவிர, நோய்கள் கட்டுப்படுவதும் இல்லை; குறைவதும் இல்லை.

மேலும் வயது மூப்பு பருவத்தில் உண்டாகும் உடல் செல்கள் தேய்மானத்தால் பல்வேறு உறுப்புகளின் செயற்பாடு இயற்கையாகவே குறைந்துவிடுகின்றது. இத்தகைய நிலையில், மூளையில் உள்ள நரம்பு செல்களின் சிதைவினால் ஞாபகமறதி உண்டாகிவிடுகின்றது. இதனால் என்ன செய்ய வேண்டும்? எத்தனை மருந்து மாத்திரைகளை எடுத்துக்கொள்ள வேண்டும்? என்பதே பலருக்கு நினைவில் இருப்பதில்லை. இதில் முக்கியமாக மிகப்பெரிய சிக்கல் உண்டாக்குவது இதய நோயாளிகளுக்குத் தான். இந்த மருந்துகளை மறதியால் எடுக்கத் தவறினால் எதிர்பாராத பின்விளைவுகளை சந்திக்க நேரிடுவதும் முதுமையில் மற்றுமொரு சவால்.

உடல் செல்கள் தேய்மானம் அடைந்த இந்த முதுமைப் பருவத்தில் மருந்துகளை அதிகம் எடுத்துக்கொள்வதும் நல்லதல்ல என்று சமீபத்திய தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. ஆகவே, அத்தியாவசிய மருந்துகளுடன் ஒருங்கிணைந்த மருத்துவமாக சித்த மருத்துவ முறைகளைப் பின்பற்றுவது உபாதைகளை போக்க உதவும்.

சித்த மருத்துவம் பாட்டி வைத்தியமாகப் பயணித்து நம் நாட்டினரிடையே நகமும், சதையும் போல பின்னிப்பிணைந்துள்ளது. அத்தகைய பாட்டி வைத்திய முறைகளை - சித்த மருத்துவத்தை முதியோர் நலம் காக்கப் பயன்படுத்துவது நலனுக்கு வழிவகுக்கும் என்பது உறுதி.

முதுமையில் சிறுநீரகத்தின் செயல் அலகுகளான நெப்ரன் எனும் சிறுநீரக செல்கள் எண்ணிக்கை இயற்கையாகவே குறைந்துவிடுகிறது. மேலும் சிறுநீரகத்தின் சிறுநீர் வடிகட்டும் திறனும் குறைந்து விடுவதால் வலி நிவாரணி மற்றும் பிற மருந்துகளை ஆலோசனை இல்லாமல் எடுத்துக்கொள்வது, சிறுநீரக பாதிப்பை உண்டாக்கும். இத்தகைய நிலையில், சித்த மருத்துவத்தில் சொல்லப்பட்டுள்ள வெளிமருந்துகள் மிகுந்த பயனளிக்கும்.

உள் மருந்துகளோடு, வெளியே பயன்படுத்தும் மருந்துகளை சித்த மருத்துவம் 32 வகையாகக் கூறுகின்றது. சித்த மருத்துவத்தில் சொல்லப்பட்டுள்ள இந்த 32 வெளி மருந்துகளில் பற்றுப் போடுதல், ஒற்றடம் கொடுத்தல், கட்டு போடுதல், மேற்பூச்சு தைலங்களை பயன்படுத்துதல் நன்மை பயக்கும். அத்துடன், சித்த மருத்துவத்தின் ஒரு பகுதியான வர்ம சிகிச்சை முறைகளும் வயோதிப பருவத்தில் வலியைக் குறைக்கும். அவ்வப்போது தொடு வர்ம சிகிச்சை முறைகளை மேற்கொள்வது நோயின் குறிகுணங்களைக் குறைப்பதோடு நோய் எதிர்ப்பாற்றலை அதிகரிக்கும், இரத்த ஓட்டத்தை சீராக்க உதவும். உடலுக்கு புத்துணர்ச்சி கிடைக்கும்.

முதுமைப் பருவத்தில் உடலுக்கு வயதாகிவிட்டது என்று எண்ணி மனதளவில் சோர்வடையாமல் அன்றாட பணிகளை செவ்வனே செய்து வந்தால் அனைவருமே சூப்பர் ஸ்டார் தான். அவ்வாறின்றி, ஓர் இடத்தில் முடங்கி அமர்வதாலோ, படுப்பதாலோ உடலில் உள்ள அங்க உறுப்புகளின் செயற்பாடு மேலும் குறைந்து பல்வேறு நோய்நிலைகளுக்கு வித்திடும் என்று மருத்துவ உலகம் எச்சரிக்கின்றது. உடல் இயக்கம் இல்லாமல் அசைவற்று அமர்ந்து விடும் முதியோர்களுக்கு இதயம், நுரையீரல், எலும்பு, தசை, சிறுநீர்ப்பாதை, குடல் சார்ந்த நோய்நிலைகள் உண்டாகி, வாழ்க்கை நலக்குறைவை உண்டாக்கும்.

முதுமையில் உடல் இயக்கம் இன்மையால் இதயத்தின் இரத்த வெளியீட்டின் அளவு குறையக்கூடும், இரத்தக்கட்டிகள் உண்டாகக்கூடும். மேலும் நுரையீரலில் நிமோனியா போன்ற நோய்த்தொற்றுகளும், நுரையீரல் சுருங்கி செயற்பாடு குறைவும் உண்டாகும். அத்துடன், பயன்படுத்தாத எலும்பு மற்றும் தசைகள் சோம்பலுக்கு ஆளாகும். உடல் அசைவு குறைவதால் குடல் அசைவும் குறைந்து மலச்சிக்கல், அஜீரணம் ஆகிய தொந்தரவுகள் உண்டாகும். மேலும் ஒரே இடத்தில் தொடர்ந்து அமர்வதால் அழுத்தப் புண்கள் உண்டாகி பல்வேறு துன்புறத்தலை ஏற்படுத்தும். முதுமைப் பருவம் என்பது மற்றுமொரு குழந்தைப் பருவம் போன்றது. நமது குழந்தைப் பருவத்தில் நமது தாய், தந்தையர்கள் எவ்வாறு நமது கரம் பிடித்து நடக்கப் பழக்கினார்கள் என்பதை நினைவில் கொண்டு ஒவ்வொருவரும் செயற்பட வேண்டியது அவசியம். முதுமையில் அவர்களின் கரம் பிடித்து நடைப் பயிற்சி பழகச் செய்வது ஆரோக்கியத்திற்கு மட்டுமின்றி, அளவிலா அன்பிற்கும் விதையாகும். அதுவே மேற்கூறிய நோய்நிலைகளில் இருந்து காத்து, அவர்களின் ஆயுட்காலத்தைக் கூட்டும் என்பதை அனைவரும் உணர வேண்டும்.

“பித்தம் அடங்கிடின் பேசாதே போய்விடு” என்பது திருமூலர் வாக்கு. இதன் பொருள் பித்த நாடி உடலில் குறைந்துவிட்டால் இறப்பை எவராலும் தடுக்க முடியாது என்பது தான். ஆகவே, உண்ணும் உணவில் மட்டுமல்லாது, உடல் இயக்கங்களாலும் பித்தத்தை குறையாமல் பாதுகாத்துக் கொள்வது முதுமையில் அவசியம் என்கிறது சித்த மருத்துவம்.

வயோதிபத்தில் பலரும் சுய கட்டுப்பாட்டைக் கொண்டு வருவதும் நோய்நிலைக்கு வழிவகுப்பதாக உள்ளது. நிற்பதற்கும், நடப்பதற்கும், அமர்வதற்கும் கூட பலர் கட்டுப்பாடுடன் செயற்படுவதால் ஆரோக்கியம் அவர்களுக்கு எட்டாக்கனியாக மாறக்கூடும்.

65 வயதில் கிட்டத்தட்ட 18 முதல் 20 சதவீதம் பேர், இனி நம்மால் முடியாது என்ற சுயகட்டுப்பாட்டைக் கொண்டுவந்து விடுவதாகவும், 75 வயதில் கிட்டத்தட்ட 25 சதவீதம் பேர் தனது செயல்களை செய்ய சுயகட்டுப்பாட்டைக் கொண்டுவந்து விடுவதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. ஆக, வயோதிபர்கள் முதுமை என்பது ஒரு பருவம் தானே தவிர, நோய் இல்லை என்பதைப் புரிந்து கொண்டு முடங்கி விடாமல் செயற்பட்டால் என்றும் பதினாறு மார்க்கண்டேயனைப் போல இளமையாய் வாழலாம்.

அதற்கு சித்த மருத்துவம் கூறும் யோகாசனம் மற்றும் மூச்சுப்பயிற்சிகளைப் பழகுவது முதுமையில் மிகப்பெரிய புத்துணர்ச்சி தரும். கடினம் இல்லாத எளிமையான ஆசனப் பயிற்சி முறைகளைச் செய்வது ஆரோக்கியத்திற்கு நன்மை பயக்கும்.

சித்த மருத்துவத்தின் மூச்சுப் பயிற்சி பழகுவது வயோதிபப் பருவத்தில் உயிர் மூச்சு நின்றுவிடாமல் தடுத்து நிறுத்தும். கூடுதலாக இது மனதை அமைதிப்படுத்துவதுடன், நல்லதொரு ஓய்விற்கும் வழிவகுக்கும். மாறுபட்ட மனநிலையைத் தணிக்கும்.

ஆரோக்கியமான அணுகுமுறையை உருவாக்கும் தன்மை மூச்சுப்பயிற்சிக்கு உண்டு. மார்புக்கூடும், விலா எலும்புகளை சுற்றியுள்ள தசைகளும் விறைப்புத் தன்மை அடைவதால் வயது முதுமையில் கடின சுவாசம் ஏற்படுகின்றது. இந்நிலையில், மூச்சுப் பயிற்சி செய்வது சுவாசத்தை சீராக்கும். முதுமையில் மனம் சார்ந்த பல்வேறு நோய்நிலைகளான மனப்பதற்றம், குழப்பம், தூக்கமின்மை ஆகியவற்றுக்கு காரணம் தனிமை உணர்வு தான். பரபரப்பாக உட்காரக் கூட நேரமில்லாமல், குடுபத்தினருடனும், உற்றார் உறவினருடனும் சிரித்துப் பேசிப் பழகக்கூட நேரமில்லாமல் இருந்த காலங்கள் சற்றே தலைகீழாகத் திரும்பி அமைதியாக ஒரே இடத்தில் படுக்கச் செய்துவிடும். முதுமையில் உடல் நலன் மட்டுமின்றி, மன நலனும் பேணிக் காக்க வேண்டியது மிக மிக முக்கியம். மனத்தின் நலனைக் காக்க மருந்துகளை நாடுவதை விட சித்த மருத்துவ பொக்கிஷங்களான யோகாசனம், தியானம் இவற்றை நாடுவது தனிமையிலும் இனிமையை உண்டாக்கும்.

முதுமையில் மனதில் உண்டாக்கும் குழப்பங்கள், சங்கடங்கள் இவற்றைப் போக்கி மன ஆரோக்கியத்துடன் உடல் ஆரோக்கியத்தை நிலைநாட்ட தியானப் பயிற்சி செய்வது நல்லது. இதனைத் திருமூலர் திருமந்திரத்தில் “மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்” என்று உடல் ஆரோக்கியத்திற்கு உடல் நலனைக் காட்டிலும் மன நலம் அவசியம் என்று கூறியுள்ளது சிறப்பு. தியானம் பழகுவதால் அதிகரித்த இரத்த அழுத்தம், இதயத் துடிப்பு குறைந்து இயல்பு நிலைக்குத் திரும்பும். கூட்டாகச் சேர்ந்து இத்தகைய பயிற்சிகளை மேற்கொள்வது கூடுதல் அன்பிற்கும், அரவணைப்புக்கும் வழிவகுக்கும்.

“இடுக்கண் வருங்கால் நகுக” என்பது திருவள்ளுவரின் குறள். அதாவது, துன்பம் வரும் வேளையில் சிரிப்பு பயிற்சி மேற்கொள்வது உடலுக்கும், மனதிற்கும் புத்துணர்ச்சி தரும். சமீப காலங்களில் பிரபலமாகி வரும் சிரிப்பு சிகிச்சையை சாடையாகக் குறிப்பிட்டு அதற்கும் முன்னோடியாக இருந்துள்ளனர் தமிழின் மூத்தகுடிகள். ஆக, முதுமையில் சிரிப்பு சிகிச்சை மேற்கொள்வது உடலுக்குத் தேவையான பிராண வாயுவைக் கொடுத்து, உடல் ஆரோக்கியத்தையும், மன ஆரோக்கியத்தையும் தரும்.கொஞ்சம் நடைப்பயிற்சி, கொஞ்ச நேரம் மனதிற்கு இதமான இசை, வலிக்கு தைலங்கள், அளவான மாத்திரைகள், அளவுச் சாப்பாடு, அவ்வப்போது யோகாசனப் பயிற்சிகள், திருமூலர் தியானம், இனிமையான நினைவுகள், நல்ல தூக்கம், ஒருங்கிணைந்த மருத்துவம் இவைகளோடு முதுமையில் கைகோர்த்து நடந்தால் ஆரோக்கியம் கைக்கு கிட்டும்.

## நக்கல் நமசிவாயம்

யால காட்டுக்கு போன ரணில் மிருகங்களுக்கு தண்ணீர் இருக்கிறதா என்று ஆய்வொன்றை நடத்தினாராம்.. யானைகள் தாகத்தில இருக்கிறது அவருக்குத் தெரியுந்தானே.. அதுதான் போல...



# மலையகப் பெண் தொழிலாளர்களின் 1000 ரூபா நாட்சம்பளம் கேள்விக்குறி

## பெண்கள் ஒத்துழைப்பு முன்னணியின் தலைவி லோகேஸ்வரி தெரிவிப்பு







இக்பால் அலி

200 வருட வரலாற்றைக் கொண்ட மலையக மக்களுள் 50 வீதத்துக்கும் அதிகமானவர்கள் பெண்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் இந்த நாட்டை வளமாக்கினர். ஆனாலும், இன்றுவரையும் இப்பெண் தொழிலாளர்கள் ஒரு நாள் சம்பளம் 1000ரூபாவை எட்டுவதென்பது கேள்விக் குறியாகவே உள்ளது என்று பெண்கள் ஒத்துழைப்பு முன்னணியின் தலைவி லோகேஸ்வரி தெரிவித்தார்.

மலையக 200 ஆவது நிகழ்வை முன்னிட்டு பெண்கள் கூட்டமைப்பு அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

200 வருட வரலாற்றைக் கொண்டாடும் விழாக்கள் மலையக பிரதேசங்களிலே இடம்பெற்றுவருகின்றன. இந்த விடயம் கொண்டாட வேண்டிய விடயமல்ல. மலையக மக்கள் கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்ப்பதும் அவர்கள் கிடைக்க வேண்டிய எதிர்காலத்தை நிர்ணயிப்பதும் இம்மக்களின் உரிமை மற்றும் அபிவிருத்தி குறித்து செயற்பாடுகளை முன்னெடுப்பதும் அவர்களுக்கான அங்கீகாரத்தை வழங்குவதுமே இன்றைய தேவையாக இருக்கின்றது. எனவே, இவ்விடயங்கள் குறித்து அரசாங்கமும் ஏனைய நிறுவனங்களும் கவனத்தில் கொள்வது காலத்தின் தேவையாகும்.

200 வருட வரலாற்றைக் கொண்ட மலையக மக்களில் 50 வீதத்துக்கும் அதிகமானவர்கள் பெண்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் இந்த நாட்டை வளமாக்கினர். ஆனாலும், இன்றுவரையும் இப்பெண்களின் ஒரு நாள் சம்பளம் 1000ரூபாவை எட்டுவதென்பது கேள்விக் குறியாகவே உள்ளது. இப்பெண்களின் அபிவிருத்தி, உரிமை குறித்த காத்திரமான கருத்துப் பகிர்வு அவசியமாக இருக்கின்றது. இந்தப் பின்னணியில் மலையகப் பெண்களுக்கான உரிமை, அபிவிருத்தி, சமூக மாற்றம் குறித்து தேசிய, சர்வதேச ரீதியாக ஆக்கபூர்வமான செயற்பாடுகள் மேலும் தேவைப்படுகின்றன.

ஏறக்குறைய 200 வருட வரலாற்றைப் பதிவு செய்கின்ற இந்தப் பெண்கள் பற்றிய கருத்தாடல் மிகக் குறைந்த மட்டத்திலேயே இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச ரீதியாக பெருந்தோட்டத் தொழிலாளர் அல்லது பெருந்தோட்ட மக்கள் என்ற பதம் பிரசித்திபெற்று விளங்குகின்றது. கடந்த 200 வருடகாலமாக இம்மக்கள் இந்நாட்டின் பொருளாதாரத்துக்கும் சமூக அபிவிருத்திக்கும் ஆணிவேராகயிருந்து வருகின்றனர். இந்த பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்க இலட்சக்கணக்கான மலையகப் பெண்கள் உயிர் கொடுத்துள்ளனர். இந்தப் பின்னணி குறித்து விழா கொண்டாடுவது அல்ல, அனுஷ்டிக்க வேண்டியதே தேவையாக இருக்கின்றது. ஆக 200 வருட விழா கொண்டாடுவதற்கு சமூகம் என்ற அடிப்படையில் நாம் எதையும் சாதித்திருக்கின்றோமா?

ஏறக்குறைய 57.8 வீதமானவர்கள் ஆங்கிலேயரால் கட்டப்பட்ட லயன் வீடுகளிலேயே வாழ்ந்துவருகின்றார்கள். அதேபோல், அரசியல் ரீதியான உரிமை மேலும் நவீன அடிமைத்தனத்துக்கு இட்டுச் செல்வதான ஒரு வழிமுறையையே காட்டுகின்றது என்றார்.

## துப்பாக்கிப் பிரயோகம்; இளைஞன் படுகாயம்

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர், துப்பாக்கியால் ஒருவரை சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக தெஹிவளை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தெஹிவளை ஓபன் பிளேஸ் விளையாட்டு மைதானத்துக்கு அருகில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் காயமடைந்தவர் பணி முடிந்து வீட்டுக்கு வந்து வீட்டின் முன் வீதியில் நின்றிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளதாகவும் வேறு யாரையாவது இலக்கு வைத்து துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சந்தேக நபர்களைக் கைது செய்ய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# அதிக இலாபம் ஈட்டுவதைத் தடுக்க கோதுமை மாவின் விற்பனை விலையை அறிவிக்கவும்

## அரசாங்க நிதி பற்றிய குழு திறைசேரியின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்





நிதி அமைச்சின் கணக்கீட்டின்படி ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 198 ரூபாவாக இருக்கும் நிலையில், நுகர்வோரைப் பாதுகாக்கும் வகையில் இதனை அறிவிப்பின் மூலம் வெளியிடுமாறு அரசாங்க நிதி பற்றிய குழு நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியது.

அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ.த சில்வா வருகை தராத நிலையில், அக்குழு பாட்டலி சம்பிக்க ரணவக்க எம்.பி.தலைமையில் அண்மையில் (15) கூடியபோதே இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெறவுள்ள 1969ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதிக் (கட்டளைச்) சட்டத்தின் கீழ் 2023.06.14ஆம் திகதி வெளியிடப்பட்ட 2336/45ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி தொடர்பில் குழுவில் கவனம் செலுத்தப்பட்டது.

2023.06.14ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல், இந்நாட்டில் கோதுமை மா இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் அவற்றின் இருப்புகளை அதிகம் பேணி அதனூடாக பெருந்தொகை இலாபம் ஈட்டுவதைத் தடுக்கும் நோக்கில் வெளியிடப்பட்டுள்ளது என நிதி அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்திருப்பதாக குழுவின் தலைவர் குறிப்பிட்டார். இவ்வாறான நிலையில், இந்நாட்டில் கோதுமை மாவுக்கான சந்தையில் எண்பது சதவீதத்தைக் கொண்டுள்ள இரண்டு நிறுவனங்கள் கோதுமையைத் தானியமாக இறக்குமதி செய்ய வாய்ப்புக் கிடைத்திருப்பதால் அதிக இலாபம் ஈட்டுவதற்கான சந்தர்ப்பம் உள்ளதா என்பது அறியப்பட வேண்டும் என்றும் குழு சுட்டிக்காட்டியது. இதற்கமைய 2023.06.14ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் எந்தளவு தூரத்துக்கு நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்வதற்கு தற்பொழுது காணப்படும் கோதுமை மா இருப்புகள் குறித்த சரியான தரவுகளை வழங்குமாறும் அறிவுறுத்தப்பட்டது. இதற்கமைய இதில் ஏதாவது மோசடிகள் இடம்பெற்றுள்ளனவா என்பதை அறிவதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருப்பதாகவும் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

1979ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழான 2336/71ஆம் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதி தொடர்பில் இங்கு கவனம் செலுத்தப்பட்டது. சீமெந்துக்கான மூலப்பொருட்களின் இறக்குமதிக்கு விதிக்கப்படும் செஸ் வரியை அதிகரிப்பதன் ஊடாக கட்டுமானத் துறை பெரிதும் பாதிக்கப்படும் என குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார். அத்துடன், துறைமுகத்தில் இறக்கப்படும் சீமெந்து விலைக்கும் விற்பனை செய்யப்படும் விலைக்கும் இடையிலான விலை வரி கழிக்கப்பட்ட பின்னர் சுமார் 700 ரூபா இலாபமாக ஈட்டப்படுவதாக குழு குறிப்பிட்டது.

சீமெந்து மற்றும் இரும்புக் கம்பி இறக்குமதி செய்யப்படும் விலை மற்றும் சகல வரிகளும் கழிக்கப்பட்ட பின்னரான விற்பனை விலைக்கும் இடையில் பாரிய வித்தியாசத்தைப் பேணுவதால் அதிகமான இலாபம் ஈட்டப்படுவதாகவும் இது தொடர்பில் அறிக்கையொன்றை வழங்குமாறும் நிதி அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் கட்டுமானத்துறை அமைச்சின் அதிகாரிகளுக்கு அரசாங்க நிதி பற்றிய குழு அறிவுறுத்தல் வழங்கியது.

அத்துடன், நகர அபிவிருத்தி அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களில் குறைந்த வருமானம் பெறுவோருக்கான வீடுகள், நடுத்தர வருமானம் பெறுவோருக்கான வீடுகள் உள்ளிட்ட பல்வேறு வீடுகளை அமைக்கும் பணிகள் முடங்கியுள்ளதாகவும் இது தொடர்பிலும் கட்டுமானத் துறைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக் குறித்தும் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு குழு வலியுறுத்தியது.

இதற்கு முன்னர் 12 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட வீட்டை தற்பொழுது நிர்மாணிப்பதற்கு ஆகக் குறைந்தது 24 இலட்சம் ரூபா தேவைப்படுவதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்க நிதி அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற வரி அதிகரிப்புகளின் போது ஏற்படுகின்ற சமூக ரீதியான பாதிப்புகள் குறித்து உரிய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படாமை பாரிய பிரச்சினை என்றும் குழுவினால் சுட்டிக்காட்டப்பட்டது. அத்துடன், சீமெந்து விலையைக் கண்காணிப்பதற்கும் சம்பந்தப்பட்ட துறையில் தலையிடவேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

2021ஆம் ஆண்டு 11ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழான 2343/60 இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி மற்றும் 2008ஆம் ஆண்டு 14ஆம் இலக்க மூலோபாய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழான 2339/08 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட கட்டளை என்பன இங்கு ஆராயப்பட்டன. முதலீடுகளை ஈர்ப்பதற்கான சலுகை நடவடிக்கைகள் பின்பற்றப்படாமை உள்ளிட்ட விடயங்களை கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு மற்றும் முதலீட்டு சபை அதிகாரிகள் தெளிவுபடுத்தினர்.

மேற்கூறிய பரிந்துரைகளுக்கு உட்பட்டு இந்த நான்கு வர்த்தமானிகளும் அரசாங்க நிதிகள் பற்றிய குழுவினால் அங்கீகரிக்கப்பட்டன.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான மஹிந்தானந்த அளுத்கமகே, கலாநிதி நாலக கொடஹேவா, பிரேம்நாத் சி.தொலவத்த மற்றும் மதுர விதானகே ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பல்கலைக்கழக மாணவன் தற்கொலை

2020ஆம் ஆண்டு இடம்பெற்ற க.பொ.த. உயர்தர பரீட்சையில் கணிதப் பிரிவில் கிளிநொச்சி மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்று பல்கலைக்கழகத்துக்கு தகுதி பெற்றிருந்த மாணவன் நேற்றுமுன்தினம் (19) தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

கிளிநொச்சி, விவேகானந்தநகர் பகுதியைச் சேர்ந்த சந்திரமோகன் தேனுஜன் ( வயது 22) என்ற மாணவனே தற்கொலை செய்து கொண்டவராவார்.

2020 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சையில் கணிதப் பிரிவில் கிளிநொச்சி மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்ற இவர், மொரட்டுவ பல்கலைக்கழகத்துக்கு தகுதி பெற்று அங்கு உயர்கல்வியைத் தொடரச் சென்றிருந்தார்.எனினும், இந்த வருடத்தில் தன்னால் கல்வியைத் தொடர சிரமமாக இருப்பதாகக் குறிப்பிட்டு, அடுத்த வருடத்திலிருந்து பல்கலைக்கழக கல்வியை தொடர விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, உளவளத்துக்கான மருத்துவ ஆலோசனைகளையும் பெற்றுள்ளார்.

இவ்வாறான நிலையிலேயே அவர் தனது வீட்டில் நேற்றுமுன்தினம் தற்கொலை செய்து கொண்டுள்ளார். அவரது பெற்றோர் ஆசிரியர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(தற்கொலை செய்துகொள்வது தவறான தீர்மானமாகும். சுகாதார அமைச்சின் 1926 என்ற இலக்கத்துக்கு துரித அழைப்பு மேற்கொண்டு உளவள ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம்)

## போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான பொலிஸ் கான்ஸ்டபிள் பணி இடைநீக்கம்

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கொழும்பு போக்குவரத்துப் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு போக்குவரத்துப் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் முன்னெடுத்த ஆரம்பகட்ட விசாரணையையடுத்தே குறித்த கான்ஸ்டபிள் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸ் குழுவொன்று சேதவத்தை பிரதேசத்தில் போதைப்பொருள் விற்பனை நிலையமொன்றை சுற்றிவளைத்து சோதனைக்குட்படுத்தியது. அதன்போது அங்கு தங்கியிருந்த மேற்படி பொலிஸ் கான்ஸ்டபிள் கைதுசெய்யப்பட் டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியினால் சோதனைக்குட்படுத்தப்பட்டபோதே அவர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர் என்பது மருத்துவ அறிக்கையூடாகத் தெரியவந்ததாகவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# அரசாங்க ஊழியர்கள் ஐவருக்கு ட்ரான்ஸ்பேரன்ஸியினால் கௌரவம்





அஷ்ரப் ஏ. சமத்

ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்கா நிறுவனம் நடத்திய "நேர்மைக்கு மகுடம்" விருது வழங்கும் நிகழ்வு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

நேர்மையுடனும் அர்ப்பணிப்புடனும் பொது மக்களுக்கு சேவையாற்றிய அரச ஊழியர்கள் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.

அரச சொத்து, நிதியை துஷ்பிரயோகம் செய்யாதவர்கள், தான் செய்த சேவைக்கு அன்பளிப்புப் பெறாதவர்கள் போன்றவர்கள் நடுவர்கள் குழுவினரால் தெரிவுசெய்யப்பட்டே இவர்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டன.

பொதுமக்களுக்காக சேவை வழங்குவதை முதன்மையாகக் கொண்டு நேர்மையாகவும் தமது கடமை நேரத்துக்கு அப்பால் தம்மை அர்ப்பணித்து பணியாற்றும் நேர்மையான அரச அதிகாரிகளைக் கண்டறியும் நேர்மைக்கு மகுடம் செயற்றிட்டத்தை எக்கவுண்டபிலிட்டி லெப் நிறுவனத்துடன் இணைந்து ஐந்தாவது முறையாக ட்ரான்ஸ்பேரன்ஸி நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது.இத்திட்டம் முதன் முதலாக நேபாளத்தில் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் இலங்கை உட்பட 12 நாடுகளில் இச் சர்வதேச அமைப்பு இவ்விருது வழங்கும் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இதற்கிணங்க குறித்த விருதுக்காக விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பப் படிவங்கள் ஐந்து பேர் அடங்கிய நடுவர் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு நேர்காணல்கள், இவர்களது சேவைகளைப் பெற்ற பொதுமக்கள், சக ஊழியர்கள் மற்றும் மேலதிகாரிகள் என சுமார் ஏழு மாத கால நுணுக்கமான மதிப்பீட்டைத் தொடர்ந்து இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

இதற்கிணங்க சுபாஜினி மதியழகன், பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், வலிகாமம் கிழக்கு,கோப்பாய். யசோதா உதயகுமார், பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், வலிகாமம் தென்மேற்கு, சண்டிலிப்பாய். விஜயவர்தன அபேயவிக்கிரம நிசங்க, வைத்தியர், மாவட்ட ஆதார வைத்தியசாலை ரிகில்லகஸ்கட. சுகாதார சேவைகள் அலுவலகம் மாவட்டப் பணிப்பாளர், நுவரெலியா.பிரதிபானி ஸ்ரீ விஜயந்தி மொல்லிகொட, தாதி உத்தியோகத்தர், ஆதார வைத்தியசாலை, எல்பிட்டிய.நளின் பிரசன்ன விஜேசேகர மேலதிக சுகாதார வைத்தியர் பொதுச் சுகாதாரப் பணிமனை அம்பலாங்கொடை ஆகியோர் இதன்போது "நேர்மைக்கு மகுடம்" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
வெள்ளிக்கிழமை 2023.08.18
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5210 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 21,552,616.00
ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 4 4 9 0 0 7

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3452 — சீட்டிழுப்பு திகதி 2023.08.18 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 73,416,624.00
ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 07 61 77 80 — விசேட எழுத்து K — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 26325

லக்கி 7 — திகதி 18.08.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0036
வெற்றி இலக்கினம் விருச்சகம் — வெற்றி இலக்கங்கள் 5 0 5 4 8 5
L7 இலக்கம் 3 2
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 11,100,893.20

தன நிதானய — தேதி 2023/08/18 — சீட்டிழுப்பு இலக்கம் 1240 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 105,611,093.60
ஆங்கில எழுத்து N — வெற்றி இலக்கங்கள் 08 22 42 77 — விஷேசட ஆங்கில எழுத்து N
Double Chance இலக்கம் 16033

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 519 — சீட்டிழுப்பு திகதி 2023-08-18 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,732,641.20
வெற்றி இலக்கினம் மீனம் — வெற்றி இலக்கங்கள் 05 23 37 55 — விசேட இலக்கினம் மீனம்

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1558 — 18/08/2023 — 09993 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.404,628,152.00
ஆங்கில எழுத்து W — சுப்பர் இலக்கம் 01 — வெற்றி இலக்கங்கள் 43 50 58 60
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
சனிக்கிழமை 2023.08.19
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5211 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 21,637,800.00
ஆங்கில எழுத்து O — வெற்றி இலக்கங்கள் 0 1 5 3 4 3

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3453 — சீட்டிழுப்பு திகதி 2023.08.19 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 73,539,512.80
ஆங்கில எழுத்து J — வெற்றி இலக்கங்கள் 35 36 42 50 — விசேட எழுத்து J — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 28278

லக்கி 7 — திகதி 19.08.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0037
வெற்றி இலக்கினம் ரிஷபம் — வெற்றி இலக்கங்கள் 6 4 1 3 6 1
L7 இலக்கம் 0 3
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 11,135,998.96

தன நிதானய — தேதி 2023/08/19 — சீட்டிழுப்பு இலக்கம் 1241 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 105,701,070.40
ஆங்கில எழுத்து V — வெற்றி இலக்கங்கள் 06 19 41 56 — விஷேசட ஆங்கில எழுத்து V
Double Chance இலக்கம் 47191

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 520 — சீட்டிழுப்பு திகதி 2023-08-19 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,846,610.40
வெற்றி இலக்கினம் மகரம் — வெற்றி இலக்கங்கள் 02 07 30 58 — விசேட இலக்கினம் மகரம்

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1559 — 19/08/2023 — 35740 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.404,738,308.00
ஆங்கில எழுத்து I — சுப்பர் இலக்கம் 07 — வெற்றி இலக்கங்கள் 17 49 63 69
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டி கண்டியில்



கண்டி நிருபர்

இந்தியக் குடியரசின் 77 ஆவது சுதந்திர தினத்திற்கு இணையாக கண்டியிலுள்ள உதவி இந்தியத் தூதரகம் சிநேக பூர்வ கிரிக்கெட் போட்டி ஒன்றை நேற்று முன்தினம் (19) ஏற்பாடு செய்திருந்தது.

இதில் இந்திய, சென்னை எஸ்.எஸ்.டி. கிரிக்கெட் அக்கடமியும் கிரிக்கெட் அக்கடமிக்கான இலங்கை ரிச்சஸ் லங்கா மத்திய நிலையமும் போட்டியிட்டன. மேற்படி சிநேக பூர்வ போட்டியில் பிரதம அதிதியாக உதவி இந்தியத் துதுவர் டாக்டர் எஸ். ஆதிரா கலந்துகொண்டார். 20 ஓவர்கள் கொண்ட இப்போட்டியில் 'கிரிக்கெட் அக்கடமிக்கான இலங்கை ரிச்சஸ் லங்கா மத்திய நிலைய அணி' ( Riches Lanka Centre for Cricket Academy) வெற்றி பெற்றது. இப்போட்டி கண்டிபொலிஸ் மைதானத்தில் இடம் பெற்றது.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# தோட்ட நிர்வாகங்களுக்கு வழங்கியது பெருந்தோட்டக் காணிகளேயன்றி தோட்டத் தொழிலாளர்களை அல்ல!

## வடிவேல் சுரேஷ் எம்.பி.ஆவேசம்



பெருந்தோட்டக் காணிகள் மட்டுமே தோட்ட நிர்வாகங்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதேயன்றி தோட்டத் தொழிலாளர்களை அல்ல.

ரத்வத்த கீழ்ப்பிரிவு தோட்ட அதிகாரிக்கு வழங்கப்படக் கூடிய தண்டனை ஏனையவருக்கும் ஓர் பாடமாக அமைய வேண்டும் - என்கிறார் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ்.

மாத்தளை, எல்கடுவ பிளான்டேஷன் ரத்வத்த கீழ்ப்பிரிவில் மூன்று குடும்பங்கள் உள்ளடங்கலாக 14 பேர் வசித்து வந்திருந்த குடியிருப்பை சனிக்கிழமை (19/08/2023) தனது அதிகாரிகள் சகிதம் வருகை தந்த உதவி முகாமையாளர், உடைத்து பொருட்களுக்கும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளார். இன்று பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை அநாதைகளாக - நிர்க்கதியான நிலையில் வீடற்று நிற்கின்றனர். சமூக வலைத்தளங்களில் இதுகுறித்த அக்காணொளி அனைவரினாலும் பகிரப்பட்டு வருகின்றது .

200 வருடங்களாக நாட்டின் பொருளாதாரத்தை தமது முதுகெலும்பு தேயும் வரை தோளில் சுமந்த ஒரு சமூகத்தை நடுத்தெருவில் நிறுத்தி வேடிக்கை பார்க்கின்றோம். பொறுமை கடந்து விட்டது. அடாவடி நிர்வாகத்திற்கு சாட்டை அடியே பதில்.

பெருந்தோட்டக் காணிகள் மட்டுமே தோட்ட நிர்வாகங்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளனவேயன்றி தோட்டத் தொழிலாளர்களை அல்ல. ரத்வத்த கீழ்பிரிவு தோட்ட அதிகாரிக்கு வழங்கப்படக் கூடிய தண்டனை ஏனையவருக்கும் ஓர் பாடமாக அமைய வேண்டும்.

பாராளுமன்றத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக என்னுடைய குரல் என்றென்றும் ஒலிக்கும். மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் இவ்விடயத்தில் ஒற்றுமையாக - கரம் கோர்த்து செயற்பட வேண்டும். இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கிடைக்கவேண்டும். இல்லையேல் தோட்ட நிர்வாகத்தினர் பாரியதொரு புரட்சிப் போராட்டத்தை எதிர்கொள்ள நேரிடும். பாதிக்கப்பட்டவர்களுக்கு அவ்விடத்தில் வீடொன்று மீண்டும் அமைக்கப்படாவிடில் அதே இடத்தில் நானே ஒரு வீடு அமைத்துக் கொடுப்பேன் என ஆவேசமாக உறுதிபடத் தெரிவித்தார்.

# உலக புகைப்பட தினம்



இரத்தினபுரி நிருபர்

உலக புகைப்பட தினத்தை முன்னிட்டு அனைத்து இலங்கை தொழில்முறை புகைப்பட ஸ்டூடியோ உரிமையாளர்களின் இரத்தினபுரி மாவட்ட சங்கத்தினால் ஏற்பாட்டு செய்யப்பட்டிருந்த புகைப்பட தின நிகழ்வு சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்க தலைமையில் நேற்று முன்தினம் (19) பெல்மதுளை லெல்லுபிட்டிய "சில்வரே" உல்லாச விடுதியில் இடம்பெற்றது.

இதன்போது வடக்கு, கிழக்கு உட்பட 25 மாவட்டங்களிலிருந்தும் புகைப்பட ஸ்டூடியோ உரிமையாளர்கள் கலந்து கொண்டதுடன் பரிசில்களும் பெற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்க, ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சட்டத்தரணி பிரதீப் சபுதந்திரி, மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க, ஜனாதிபதி புகைப்படக் கலைஞர் பிரசன்ன ஹேன்னாயக்க உட்பட புகைப்பட உரிமையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# எசல பெரஹரவை முன்னிட்டு விசேட புகையிரத சேவைகள்

கண்டி நிருபர்

கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் எசலபெரஹரவை முன்னிட்டு விசேட புகையிரத சேவைகள் இடம்பெறவுள்ளன.

மேற்படி விசேட புகையிரத சேவை எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை நடத்தத் திட்டமிட்டுள்ளதாக புகையிரத்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு, மாத்தளை, பதுளை, நாவலப்பிட்டி ஆகிய இடங்களில் இருந்து கண்டியை நோக்கிய மேற்படி விஷேட சேவைகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

ரந்தோலி பெரஹரா இடம்பெறும் காலங்களில் அதிகமான பொதுமக்கள் கண்டிக்கு வருகை தருவது வழக்கம். கடந்த காலங்களில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக வருகை தராத மக்கள் இம்முறை அதிகளவில் வருகை தருவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஊழல் – மோசடிகளில் ஈடுபடுவோரையே நாட்டைவிட்டு வெளியேற்றுவது நல்லது

கண்டி நிருபர்



கற்றவர்களும் உயர் பதவியில் உள்ளவர்களும் நாட்டை விட்டு வெளியேறுவதை விடுத்து ஊழல் -மோசடிகளில் ஈடுபடுவோரையே வெளியேற்றவேண்டும் என மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்தார்.

நாவலப்பிட்டி மற்றும் தெல்தோட்டைப் பிரதேச மக்களுக்கு அண்மையில் வாழ்வாதார உதவிகள் பலவற்றை வழங்கிவைக்கும் நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பற்றிக் மற்றும் ஆடை தைத்தல் முதலான துறைகளில் பயிற்சியை முடித்த 30 மாணவிகளுக்கு இங்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன் பலருக்கு தென்னை மரக்கன்றுகள், கோழிக் குஞ்சுகள் போன்றனவும் வழங்கப்பட்டன. இவ் வைபவத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலைக் காலத்திலிருந்தே நற்பண்புகளைப் புகட்டி சகலரும் நல்லவர்களாக வளர்க்கப்படல் வேண்டும். அவ்வாறு வளர்த்திருந்தால் இன்று நாடு இப்படியான குட்டிச்சுவராகும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்காது - என்றார்.

# முஸ்லிம்களால் சிங்களப் பாடசாலைக்கு பெறுமதியான உபகரணங்கள் அன்பளிப்பு

கண்டி நிருபர்

வத்துகாமம் கல்வி வலயத்திலுள்ள பொல்கொல்லவத்த சிங்கள மகாவித்தியாலயத்திற்கு மடவளையைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞர் குழு ஒன்றால் இன நல்லுறவை வலியுறுத்தி பல இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் அண்மையில் கையளிக்கப்பட்டன.

மேற்படி பாடசாலை மடவளை முஸ்லிம் கிராமத்தை அண்மித்துள்ள ஒரு பாடசாலையாக இருப்பதுடன், குறிப்பிட்ட அளவு முஸ்லிம் மாணவர்கள் இதில் கல்வி கற்று வருகின்றனர். அதேநேரம், குறிப்பிடத்தக்க அளவு முஸ்லிம் பழைய மாணவர்களையும் கொண்ட ஒரு பாடசாலையாக இது உள்ளது.

இப்பாடசாலை நிர்வாகம் மடவளையைச் சேர்ந்த லண்டனில் வசிக்கும் ஒருசில நண்பர்களிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான கணினிதொகுதியும், அதேயளவு பெறுமதி கொண்ட போட்டோ பிரதி இயந்திரம் ஒன்றையும் லண்டன் வாழ் நண்பர்கள் வழங்கினர்.



# காணி விடுவிப்பு தொடர்பில் ஜனாதிபதி செயலணிக் கூட்டம்! தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அடியோடு புறக்கணிப்பு

மன்னார் நகர் நிருபர்

மன்னார் மாவட்டத்தின் கீழ் வனவளத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகள் தொடர்பிலும் அவற்றை விடுவிப்பது தொடர்பிலும் கலந்துரையாடுவதற்கென நேற்று முன்தினம் (18) மன்னார் மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் ஸ்ரான்லி டிமெல்லின் நெறிப்படுத்தலில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் காதர் மஸ்தான் தலைமையில் கூட்டம் ஒன்று இடம்பெற்றது. இக்கூட்டத்தில் கலந்துகொள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்திருந்த போதிலும், அவர்கள் அதனை அடியோடு புறக்கணித்திருந்தனர்.

ஜனாதிபதி செயலகத்தின் பிரதிநிதிகள், வனவளத் திணைக்களப் பிரதிநிதிகள், வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளின் பங்கு பற்றுதலுடன் இடம்பெற்ற குறித்த கூட்டத்தில் மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கி கையகப்படுத்தப்பட்ட காணிகள் தொடர்பிலும் அவை விடுவிப்பு தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது பிரதேச செயலாளர்கள், கணி உத்தியோகஸ்தர்கள், பாரளுமன்ற உறுப்பினர்களான ரிஷாட் பதியுதீன் மற்றும் முன்னாள் நகரசபை, பிரதேச சபைத் தவிசாளர்கள் உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டனர்.

குறித்த கூட்டம் ஏற்கனவே காணி விடுவிப்பு தொடர்பில் உயர் மட்டங்களால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் தெரியப்படுத்துவதற்கான கூட்டமாகவே இது காணப்பட்டது.

அதேநேரம், உள்ளூர் அரச பிரதிநிதிகளினால் தெரிவிக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பிலும் இறுதியான விடுவிப்பு தொடர்பிலும் எந்தத் தீர்மானங்களும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன், கலந்துரையாடப்பட்ட விடயங்களை மேலதிக அனுமதிக்காக அனுப்பிவைப்பதற்கான தீர்மானமே இதில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்நிலையில், இக்கூட்டத்திற்கு அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் அழைக்கப்பட்ட போதிலும், தமிழ் பாரளுமன்ற உறுப்பினர்கள் குறித்த கூட்டத்தில் இக்கூட்டத்தால் எந்தப் பயனும் இல்லை என்ற அடிப்படையில் கலந்து கொள்ளவில்லை

அதேநேரம், இவ்வாறான கூட்டங்களுக்கு உரிய விதத்திலும் - உரிய நேரத்திலும் தங்களுக்கு அழைப்பு விடுக்கப்படுவதில்லையெனவும் கூட்டங்களில் தங்களது கருத்துகளைத் தெரிவிப்பதற்கு அரசதரப்பு அரசியல் பிரதிநிதிகள் வாய்ப்பு வழங்குவதில்லை என்றும் இதன் காரணமாகவே தாங்கள் கலந்து கொள்ளாமல் புறக்கணித்ததாகவும் கூட்டத்தில் கலந்து கொள்ளாத தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# இனவாதத்தை கக்குபவர்களை ஒருபோதும் கணக்கில் எடுக்காதீர்கள்!

## கண்டனம் தெரிவிக்கிறார் அங்கஜன் எம்.பி.

சாவகச்சேரி நிருபர்



இனவாதத்தைக் கக்கிக்கொண்டிருப்பவர்களை ஒருபோதும் கணக்கில் எடுக்காமல் நாம் எமது இலக்கை நோக்கிப் பயணிக்க வேண்டும் என யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மேர்வின் சில்வாவின் கருத்துக்கு கண்டனம் தெரிவித்துக் கூறியுள்ளார்.

கடந்த புதன்கிழமை பருத்தித்துறை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்படி கருத்தைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் ஒரு பக்கம் பொருளாதார நெருக்கடி, மறுபக்கம் உரிமை சார்ந்த பிரச்சினை எனப் போராடிக்கொண்டிருக்கும் வேளையில் இன்னொரு பக்கம் சிலர் இனவாதத்தைக் கக்குகின்றனர். நாம் இவை எல்லாவற்றையும் கடந்து அவர்களின் கருத்துகளைப் பொருட்படுத்தாமல் மேலேறி வரவேண்டும். அதற்கு நாம் எமது இலட்சியப் பாதையில் இருந்து எள்ளளவும் மாறக்கூடாது.

இனவாதத்தைக் கக்குபவர்கள் சாதாரணமானவர்கள். அவர்களுக்கு பதில் சொல்லிக்கொண்டு இருக்க வேண்டிய தேவை எமக்குக் கிடையாது. மேர்வின் சில்வா சாதாரண ஒரு நபர். சரத் வீரசேகர ஒரு சாதாரண பாராளுமன்ற உறுப்பினர்.

நாம் வீதியால் செல்லும் போது நாய் குரைத்தால் எவ்வாறு கண்டு கொள்ளாமல் செல்வோமோ அதுபோல இவ்வாறானவர்களின் இனவாதக் கருத்துகளையும் கண்டுகொள்ளாமல் எமது பாதையில் நாம் பயணிக்க வேண்டும்.

அவர்கள் இனவாதத்தைக் கக்குகின்றனர் என்று நாமும் இனவாதம் பேசினால் எமது இலட்சியப் பாதையில் பயணிக்க முடியாது. உணர்வு அரசியல்-உணர்ச்சி அரசியல் இரண்டிற்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன.நாம் கடந்த காலத்தில் இழந்தவற்றை எமது மனதில் வைத்துக்கொண்டு வெற்றிக்கான பாதை நோக்கிப் பயணிக்க வேண்டும். என அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

# சாவகச்சேரியில் திருட்டுகள் அதிகரிப்பு; பொலிஸாரால் எச்சரிக்கை அறிவிப்பு

சாவகச்சேரி நிருபர்

சாவகச்சேரியில் அண்மைக்காலமாக அதிகரித்துக் காணப்படுகின்ற திருட்டுகள் தொடர்பாக பொதுமக்களை எச்சரிக்கையாகவும் விழிப்புடனும் இருக்குமாறு சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் அண்மைக்காலமாக பகல் மற்றும் இரவு வேளைகளில் வீடுகள் உடைக்கப்பட்டு பெறுமதிமிக்க தங்க ஆபரணங்கள் மற்றும் பெறுமதியான உடமைகள் களவு போவதாக பெருமளவான முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன.

எனவே, பொதுமக்கள் தங்களின் பெறுமதியான உடமைகளை பாதுகாப்பாக வைப்பதுடன் வீட்டை விட்டு வெளியேறும்போது கதவு மற்றும் ஜன்னலை பாதுகாப்பாகப் பூட்டி விட்டு செல்லுமாறும் அருகிலுள்ள நம்பிக்கையான ஒருவருக்குத் தெரியப்படுத்திவிட்டுச் செல்லுமாறும் கேட்டுக்கொள்கின்றார்.

அதுமட்டுமன்றி, தங்களின் பிரதேசத்தில் அறிமுகம் இல்லாதவர்களின் நடமாட்டம் காணப்பட்டால் அதில் கூடிய கவனம் செலுத்துவதுடன் சந்தேகத்திற்கிடமான வாகன இலக்கங்களை குறித்து வைப்பதும் களவுகளைத் தடுப்பதற்கு வசதியாக அமையும் எனக் கேட்டுள்ளார். பொதுமக்கள் சாவகச்சேரி பொலிஸ் நிலைய எல்லைக்குள் ஏதேனும் அசாம்பாவிதங்கள் இடம்பெறும் பட்சத்தில் 0212270722 என்ற பொலிஸ் நிலைய தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பை ஏற்படுத்தி அறிவிக்க முடியும் எனவும் மேலும் அவர் தெரியப்படுத்தியுள்ளார்.

அத்துடன், களவுகள் தொடர்பாக சாவகச்சேரி பிரதேசத்தில் ஒலிபெருக்கி மூலம் பொலிஸாரால் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மோட்டார் சைக்கிள் தீக்கிரை



சாவகச்சேரி நிருபர்

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அரசடி-தாமோதரம்பிள்ளை வீதியில் உள்ள வீடொன்றின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் வியாழக்கிழமை (17)அதிகாலை வேளையில் இனந்தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

பெண்கள் தனித்திருந்த வீடொன்றின் முன் வாசலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார்சைக்கிளே இவ்வாறு அதிகாலை 2.30 மணியளவில் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# மாணவனை சரமாரியாக தாக்கிய உடற்கல்வி ஆசிரியர் கைது

சாவகச்சேரி நிருபர்

கொடிகாமம் நகர் பகுதியை அண்மித்து அமைந்துள்ள பாடசாலை ஒன்றின் க.பொ.த. சாதாரண தர வகுப்பு மாணவனை சரமாரியாகத் தாக்கிய குற்றச்சாட்டில் அப்பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியர் கொடிகாமப் பொலிஸாரால் கடந்த வெள்ளிக்கிழமை (18) கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது;

கடந்த வியாழக்கிழமை பாடசாலையின் தவணை விடுமுறையை மகிழ்ச்சியால் வெளிப்படுத்திய கொடிகாமம், தவசிக்குளம் பகுதியைச் சேர்ந்த 16வயது மாணவனை உடற்கல்வி ஆசிரியர் கன்னத்தில் அறைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் மாணவன் பாதிக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

அதேசமயம், மாணவனின் தந்தை கொடிகாமப் பொலிஸாருக்கு இது தொடர்பாக வழங்கிய முறைப்பாட்டை அடிப்படையாக வைத்து கொழும்புத்துறைப் பகுதியைச் சேர்ந்த உடற்கல்வி ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார்.கைதான ஆசிரியரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை கொடிகாமப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# உலக செய்திகள்

## தோல்வியில் முடிந்த ரஷ்யாவின் விண்வெளி கனவு



# நிலவில் நொறுங்கி வீழ்ந்த லூனா-25 விண்கலம்

நிலவை ஆய்வு செய்ய ரஷ்யா அனுப்பிய லூனா - 25 விண்கலம் விழுந்து நொறுங்கியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நிலவின் தென் துருவத்தை ஆய்வு செய்ய கடந்த 11ஆம் திகதி லூனா -25 விண்கலம் விண்ணில் ஏவப்பட்டது.

புவிவட்ட பாதையில் சுற்றாமல், எரிபொருளின் உதவியுடனே உந்தி தள்ளப்பட்டு நிலவின் சுற்றுப்பாதைக்குள் 17ஆம் திகதியன்று அந்த விண்கலம் நுழைந்தது.

நிலவின் மேற்பரப்பில் இன்று (21) அதனை தரையிறக்க ரஷ்ய விண்வெளி ஆய்வு மையமான ரோஸ்கோஸ்மோஸ் திட்டமிட்டிருந்தது. அதன்படி, விண்கலத்தின் சுற்றுப்பாதை படிப்படியாக குறைக்கப்பட்டது.

இந்நிலையில், நிலவில் தரையிறக்குவதற்கு முந்தைய சுற்றுவட்டப் பாதையில் விண்கலத்தை செலுத்துவதில் திடீரென தொழில்நுட்ப சிக்கல் ஏற்பட்டதாக விஞ்ஞானிகள் தெரிவித்திருந்தனர்.

அந்த விண்கலம் தரைக்கட்டுப்பாட்டு மையத்துடனான தொடர்பை இழந்த நிலையில், நேற்றுமுன்தினமும் நேற்றும் இணைப்பை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்ததாக ரோஸ்கோஸ்மோஸ் விளக்கமளித்துள்ளது.

பின்னர், கணிக்க முடியாத வகையில் கட்டுப்பாட்டை இழந்து பயணித்த விண்கலம், நிலவின் மேற்பரப்பில் வீழ்ந்து நொறுங்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

47 ஆண்டுகளுக்குபின் நிலவை ஆய்வு செய்ய ரஷ்யா மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிந்துள்ளது. சந்திரயான் - 3 விண்கலத்தின் லேண்டர் வெற்றிகரமாக தரையிறக்கப்பட்டால், நிலவின் தென் துருவத்தில் விண்கலத்தை தரையிறக்கும் முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெறும்.

# நாளைமறுதினம் மாலை 6.04 மணிக்கு நிலவில் லேண்டாகும் விக்ரம்






சந்திரயான் - 3 விண்கலத்திலிருந்து பிரிந்த லேண்டரின் இறுதிகட்ட வேகக் குறைப்பு நடவடிக்கை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது என இஸ்ரோ அறிவித்துள்ள நிலையில், நாளைமறுதினம் (23) மாலை 6.04 மணியளவில் விக்ரம் லேண்டர் நிலவில் தரையிறங்கவுள்ளது.

விக்ரம் லேண்டரை நிலவின் மேற்பரப்பில் பத்திரமாக தரையிறக்குவதற்கான முன்னேற்பாடுகளில் இஸ்ரோ விஞ்ஞானிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்திய விண்வெளி ஆய்வு நிலையமான இஸ்ரோ, நிலவை ஆய்வு செய்வதற்காக, சந்திரயான் - 3 விண்கலத்தை கடந்த ஜூலை 14ஆம் திகதி ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து வெற்றிகரமாக செலுத்தியது. இந்த விண்கலம் மூன்று பிரிவுகளை கொண்டதாகும். புரபல்ஷன் மாட்யூல் எனப்படும் உந்து கலன், லேண்டர் எனப்படும் நிலவில் தரையிறங்கும் சாதனம், ரோவர் எனப்படும் நிலவில் ஆய்வு செய்யும் வாகனம் அடங்கியதே சந்திரயான் - 3 விண்கலமாகும்.

நிலவின் சுற்றுப்பாதையில் பயணித்த சந்திரயான்-3 விண்கலத்தின் தொலைவு கொஞ்சம் கொஞ்சமாக குறைக்கப்பட்டது. இதையடுத்து நிலவின் சுற்றுப்பாதையில் உள்ள சந்திரயான்-3 விண்கலத்தில் இருந்து விக்ரம் லேண்டரை பிரிக்கும் முக்கியமான பணி கடந்த 17ஆம் திகதி வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

பின்னர், விக்ரம் லேண்டர் நிலவின் மேற்பரப்பில் எடுத்த புகைப்படங்களை இஸ்ரோ சமூகவலைதளத்தில் வெளியிட்டது. .

அதன்பின்னர், படிப்படியாக அதன் வேகம் குறைக்கப்பட்டதையடுத்து, நிலவின் மேற்பரப்புக்கும் விக்ரம் லேண்டருக்கும் இடையிலான தூரமும் குறைந்துள்ளது.

குறைந்தபட்சமாக நிலவிலிருந்து 25 கிலோ மீற்றர் தூரத்திலும் அதிகபட்சம் 134 கிலோ மீற்றர் தூரத்திலும் லேண்டர் பயணிப்பதாக இஸ்ரோ அறிவித்துள்ளது.

திட்டமிட்டபடி ஆய்வுகளை மேற்கொள்ள தரையிறங்கும் இடத்தில் சூரிய உதயம் தொடங்கும் நேரத்துக்காக லேண்டர் காத்திருப்பதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், நாளைமறுதினம் 23ஆம் திகதி மாலை 6.04 மணியளவில் விக்ரம் லேண்டர் தரையிறங்கும் என இஸ்ரோ அறிவித்துள்ளது. ஏற்கனவே மாலை 5.45 மணியளவில் தரையிறக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், நேரம் மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஸ்பெயினில் காட்டுத் தீ: 26 ஆயிரம் பேர் வெளியேற்றம்



ஸ்பெயினின் தெனேரிஃபேயில் கட்டுக்கடங்காது கொழுந்துவிட்டெரிந்துவரும் காட்டுத்தீயால் 26ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

காட்டுத் தீயை கட்டுப்படுத்த முடியாதளவுக்கு கொழுந்துவிட்டு எரிவதால், தீயணைப்பு வீரர்கள் பெரும் போராட்டத்துக்குள்ளாகியுள்ளனர். 30 மைல் சுற்றளவில் சுமார் 12 ஆயிரம் ஏக்கர் நிலம் இந்த தீயால் கருகியுள்ளது.

## உக்ரைன் மீது ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல்

**07 பேர் உயிரிழப்பு; 15 குழந்தைகள் உட்பட 129 பேர் படுகாயம்**



உக்ரைனின் வடக்கு பகுதியிலுள்ள சேர்னிஹிவ் நகரின் திரையரங்கின் மீது ரஷ்யா மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதலில் 07 பேர் உயிரிழந்தனர். படுகாயமடைந்த 15 குழந்தைகள் உள்ளிட்ட 129 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஏவுகணை வீச்சில் ஒரு பிரதான சதுக்கம் மற்றும் பல்கலைக்கழக கட்டடம் ஒன்றும் சேதமடைந்தன.

# இம்ரான்கான் விஷம் கொடுத்து கொல்லப்படலாம்



பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் சிறையில் விஷம் கொடுத்து கொல்லப்படலாம் என அவரது மனைவி புஷ்ரா பீபி அச்சம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாண உள்துறை செயலாளருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில்,

இம்ரான்கானை எந்த நியாயமும் இன்றி சிறையில் அடைத்துள்ளதாகவும் அவரை ராவல்பிண்டியிலுள்ள அடியாலா சிறைக்கு மாற்றுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

தனது கணவர் மீது கடந்த காலங்களில் இரண்டு படுகொலை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவித்துள்ள புஷ்ரா பீபி, அட்டாக் சிறையில் இம்ரான் கான் விஷம் வைத்து கொல்லப்படுவார் என அச்சப்படுவதாகவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**பாகிஸ்தானின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் கைது**

இந்நிலையில், பாகிஸ்தானின் முன்னாள் வெளியுறவு அமைச்சரான ஷா மெஹ்மூத் குரேஷியை பொலிஸார் இஸ்லாமாபாதில் அவரது இல்லத்தில் வைத்து கைது செய்துள்ளனர். 67 வயதான குரேஷி, இம்ரானின் நெருக்கமான நண்பர் ஆவார்.



மறைந்த இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் 79ஆவது பிறந்த நாள் நேற்று(21) நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது. இதையொட்டி, டில்லியிலுள்ள ராஜீவ் காந்தியின் நினைவிடத்தில் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் சோனியா காந்தி, பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி, தலைவர் மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

# வாங்கிய கடனை அடைக்க வழியில்லாததால் தன்னைத்தானே கடத்தி நாடகமாடிய வர்த்தகர்!

## மூவருக்கு விளக்கமறியல்

கொலொன்ன பிரதேசத்தில் கடத்தப்பட்டதாக நாடகமாடி, தலைமறைவாக இருந்தபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்ட வர்த்தகர் உட்பட மூவர் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் 18ஆம் திகதி எம்பிலிபிட்டிய நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே நீதிவான் அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

கடத்தப்பட்டதாக கூறப்பட்ட வர்த்தகர், தெல்கந்த பிரதேசத்தில் முச்சக்கரவண்டியில் சென்ற போது மிரிஹான பொலிஸாரால் 18ஆம் திகதி கைது செய்யப்பட்டார். இந்நிலையில் பொலிஸார் நடத்திய விசாரணையில், வாங்கிய கடனைத் தீர்க்க முடியாததால், தன்னைத்தானே ஆள் வைத்து கடத்தி நாடகமாடியதாகத் தெரியவந்துள்ளது.

கடந்த 16ஆம் திகதி கொலொன்ன பகுதியில் வாகனத்தில் பயணித்த வர்த்தகர் ஒருவரை தாக்கி பணத்துடன் கடத்திச் சென்றதாக கொலொன்ன பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதற்கிணங்க, விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் அவர் பயணித்ததாகக் கூறப்படும் வாகனத்தை அணில்கந்த பொது மயானத்துக்கு அருகிலிருந்து கைப்பற்றினர். இதன்போது சாரதியின் ஆசனத்தில் மிளகாய்த் தூள் சிதறியிருந்தது. இதுகுறித்தும் பொலிஸாருக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இது இவ்வாறிருக்க, குறித்த வர்த்தகர் தெல்கந்த பிரதேசத்தில் முச்சக்கரவண்டியொன்றில் இருப்பதாக 18ஆம் திகதி பிற்பகல் மிரிஹான பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. அதன்படி, அப்பகுதிக்குச் சென்ற பொலிஸார் அவரைக் கைது செய்து விசாரணை நடத்தியபோது தெல்கந்த பகுதியில் கட்டிடப் பொருட்கள் விற்பனை செய்யும் இடத்தை வைத்துள்ள தனது நண்பருடன் முச்சக்கரவண்டியில் கடந்த 16ஆம் திகதி அப்பகுதிக்கு வந்ததாக வாக்குமூலம் அளித்துள்ளார்.

அதன்படி அவருக்கு அடைக்கலம் கொடுத்த நபரையும் முச்சக்கரவண்டி சாரதியையும் பொலிஸார் கைது செய்ததுடன் வர்த்தகர் வழங்கிய இரண்டரை இலட்சம் ரூபா, பல்வேறு வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்ட பல பற்றுச்சீட்டுகள் மற்றும் நுகேகொடை பகுதிக்கு அவர் வந்த முச்சக்கரவண்டி என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

பின்னர், சம்பந்தப்பட்ட தொழிலதிபரிடம் நடத்திய விசாரணையில், கடந்த 16ஆம் திகதி வீட்டிலிருந்து 35 இலட்சம் ரூபாவையும் பின்னர் தனது கணக்கில் இருந்து மேலும் 10 இலட்சம் ரூபாவையும் எடுத்துச் சென்றுவிட்டு, வீடு திரும்பியபோது, ஒரு கும்பல் தன்னை கடத்திச் சென்று கொள்ளையடித்ததாகத் தெரிவித்தார்.

மிரிஹான பொலிஸாரின் தொடர் விசாரணையில் தாம் பொய்யான வாக்குமூலத்தை வழங்கியதாக அவர் ஒப்புக்கொண்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக எம்பிலிப்பிட்டிய குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டு கொலொன்ன பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சந்தேக நபரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், தனது வியாபாரத்தில் சுமார் 50 இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் இதற்காக பல்வேறு நபர்களிடம் சுமார் 50 இலட்சம் ரூபா கடனாகப் பெற்றதாகவும் பின்னர் கடனைத் தீர்க்க முடியாமல் போனதாகவும் அதன்படி, அப்பகுதியில் இருந்து தலைமறைவாக முடிவு செய்ததாகவும் பொலிஸாரிடம் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

பொலிஸாரின் விசாரணைகளின் பின்னர், சந்தேகநபர்கள் 18ஆம் திகதி எம்பிலிபிட்டிய நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், சந்தேகநபர்களை எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

# பரியோவான் கல்லூரியில் கும்பாபிஷேகப் பெருவிழா

இறக்குவானை பரியோவான் தமிழ்த் தேசிய கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மகா வித்தியா கணபதி ஆலய ஆவர்த்தன கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இன்று பூர்வாங்க கிரியைகள் ஆரம்பமாகவுள்ளன. இன்று காலை 10 மணிக்கு தேவதா அனுக்ஞை, கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், வாஸ்துசாந்தி ஆகியன இடம்பெறவுள்ளன.

நாளைய தினம் 22ஆம் திகதி காலை 08 மணி முதல் 11 மணிவரையான சுபவேளையில் விநாயகர் வழிபாடு, ஆச்சாரிய வர்ணம், கும்பலங் காரம், வேதபாராயணம், திரவியசித்தி இடம்பெற்று எண்ணெய்க் காப்பு இடம்பெறவுள்ளது.

நாளை மறுதினம் 23ஆம் திகதி காலை 06 மணிமுதல் 7.30 மணிவரையான சுபவேளையில் கோபூஜை, இலட்சுமி பூஜை, மகா தீபாராதனை ஆகியன இடம்பெற்று 9.03 மணிமுதல் 9.23 மணிவரையான சுபவேளையில் அருள்மிகு மகா வித்தியா கணபதிக்கும் சரஸ்வதி தேவி, இலட்சுமி தேவி ஆகியோருக்கும் மகா கும்பாபிஷேகம் நடத்தப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறவுள்ளது. மண்டலாபிஷேக பூர்த்தி நாளான செப்டெம்பர் 03 ஆம் திகதி காலையில் சங்காபிஷேகப் பூஜை இடம்பெற்று அன்னதானம் வழங்கப்படும்.

பரியோவான் கல்லூரியின் பழைய மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த கும்பாபிஷேக பூஜைகளில் தினமும் காலையும் மாலையும் விசேட அபிஷேகப் பூஜைகள் இடம்பெறவுள்ளன. கும்பாபிஷேக நாளான ஓகஸ்ட் 23ஆம் திகதி சிறப்பு அதிதியாக இந்திய துணைத் தூதுவர் டாக்டர் எஸ்.ஆதிரா கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தோனேஷியாவின் சுதந்திர தின நிகழ்வு




அஷ்ரப் ஏ.சமத்

இந்தோனேஷியாவின் 78ஆவது சுதந்திர தின நிகழ்வு கொழும்பு தூதரகத்தில் இலங்கைக்கான இந்தோனேஷியத் தூதுவர் தேவி தலைமையில் அண்மையில் (17) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இந்தோனேஷிய தேசியக் கொடியை தூதுவர் ஏற்றி வைத்தார்.

இலங்கையில் வாழும் இந்தோனேஷிய மக்கள் மற்றும் சர்வமதத் தலைவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இதன்போது இந்தோனேஷிய நாட்டின் கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்ற அதேவேளை, இந்தோனேஷியத் தூதுவர் இந்தோனேஷியா - இலங்கை நட்புறவு, வர்த்தக சங்க நிகழ்வுகளை நினைவு கூர்ந்தார்.



ஹுசைன் ராஷார்ட் ஜனாஸா பௌண்டேசனின் ஐம்பதாவது ஆண்டு பூர்த்தி விழா பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இலங்கைக்கான மலேஷிய உயர்ஸ்தானிகர், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை முன்னாள் பணிப்பாளர் அஹமத் முனவ்வர், ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்தின் தலைவர் பரிஹில்லாஹ், ஹசன் மௌலானா, சர்வமதத் தலைவகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

**படங்கள்:** அஷ்ரப் ஏ.சமத்





கொழும்பு -12 அல் -ஹிக்மா கல்லூரியின் ஊடக மன்றம் நடத்திய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் எம்.எம். மஹ்சூர் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஊடகவியலாளர் எம்.சி.ரஸ்மின், பாடசாலை ஊடகப் பொறுப்பாசிரியர்களான டி.என்.ஹிதாயா, டி.பி.சங்கர், எப்.பஹாஸா, எப்.ரிஸ்னா, எம்.ஏ.ஏ.அஸ்பாக், ஊடக மன்றத் தலைவர் ஏ.எம்.எம்.அனஸ், ஊடக மன்ற உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பட்டிருப்பில் ஆங்கில தின நிகழ்வு






துறைநீலாவணை செய்தியாளர்

பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகம் ஏற்பாடு செய்த ஆங்கில தினநிகழ்வு பட்டிருப்பு வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ்.சிறிதரனின் நெறிப்படுத்தலின் கீழ் கல்லாறு மத்திய கல்லூரியில் வியாழக்கிழமை (17) நடைபெற்றது.

நிகழ்வில் மட்டக்களப்பு மத்தி வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.அமீர் பிரதம அதிதியாகவும் பட்டிருப்பு கல்வி வலயத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளர்களான திருமதி ஜெயந்திமாலா பிரியதர்சன், புருசோத்மன் திவிதரன், ஆர்.ஜீவானந்தராசா, என்.நேசகஜேந்திரன் ஆகியோரும் உதவிக் கல்விப் பணிப்பாளர்களான எஸ்.தயாலசீலன், எஸ்.பார்த்தீபன், கு.திருச்செல்வம் உட்பட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன் பிரதம அதிதி பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டதுடன் மாணவர்களின் கலை நிகழ்வுகள் மற்றும் போட்டி நிகழ்வு நடைபெற்றதுடன் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவை சீருடை அறிமுகம்



மாளிகைக்காடு செய்தியாளர்

யூ.கே.காலித்தீன் - சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவையின் சீருடை அறிமுக நிகழ்வு சாய்ந்தமருது கமு/கமு/றியாழுல் ஜன்னா வித்தியாலயத்தில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை சாய்ந்தமருது கிளையின் தலைவர் அஷ்-ஷெய்க் எம்.எஸ்.எம்.சலீம் (ஸர்க்கி) தலைமையில் இடம்பெற்றது.

ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவையின் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான ஏ.எஸ்.அஸ்வரின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேரவைக்கான சீருடையை அறிமுகம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலக நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.எம். நளிர், பேரவையின் மூத்த உலமா அஷ்-ஷெய்க் யூ.எல்.அஷ்ரப் (தப்லிக்), ஒருங்கிணைப்பாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் ஊர்ப் பிரமுகர்கள் கலந்துகொண்டதோடு ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான ஊடகவியலாளர் யூ.கே. காலித்தீனின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுபெற்றது.

சீருடைக்கான அனுசரணையை மரணித்த தாயின் ஞாபகார்த்தமாக பொறியியலாளர் அலியார் சௌஃபர் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## "யாவருக்கும் உறையுள்"
### சம்மாந்துறையில் வீடு கையளிப்பு





சம்மாந்துறை OCD அமைப்பின் தலைவரின் எண்ணக்கருவில் உருவான "யாவருக்கும் உறையுள் - 2030" எனும் தொனிப்பொருளில் நிர்மாணிக்கப்பட்ட 10ஆவது வீடு கையளிக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை (18) சம்மாந்துறையில் நடைபெற்றது.

குறித்த அமைப்பின் தலைவரும் விஞ்ஞான முதுமாணியும் சமூக சேவகருமான அஸ்மி யாஸீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு நிர்மாணிக்கப்பட்ட வீட்டை உரிமையாளரிடம் கையளித்தார்.

மேலும், அமைப்பினால் நிர்மாணிக்கப்படவுள்ள 11ஆவது வீட்டுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வும் அஸ்மி யாஸீன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பிரதம பொறியியலாளர் எம்.ஐ.எம்.நஸீர், அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.பஸீர், ஆசிரியர் எம்.எம்.எம்.காதர், அம்பாறை மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் சி.எம்.எம்.றிஸ்லீன், தேசிய சேமிப்பு வங்கியின் முன்னாள் முகாமையாளர் எம்.எம்.மன்சூர் உட்பட பொதுமக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.





திருகோணமலை - வெருகல் சித்திர வேலாயுதர் சுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் கொடியேற்றத்துடன் சனிக்கிழமை(19) ஆரம்பமானது. வெருகல் ஆலயத்தின் மரபுவழி கங்கானம் இராசையா ஞான கணேசன் மற்றும் ஆலய நிர்வாகத்தினரின் பூரண ஒத்துழைப்போடு இடம்பெற்ற மஹோற்சவப் பெருவிழாவில் சுவாமி உள்வீதி உலாவருதல் இடம்பெற்றது.

**படங்கள்:** *வாழைச்சேனை மேலதிக, மூதூர் செய்தியாளர்கள்*






முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டதிருத்தத்துக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளை இஸ்லாமிய நோக்குடன் தெளிவுபடுத்தும் விதமாக கலாநிதி றவூப் ஸெய்ன் எழுதிய "முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டம் - ஓர் இஸ்லாமிய நோக்கு" எனும் நூல் வெளியீடு அக்கரைப்பற்று ஹல்லாஜ் வள நிலையத்தில் வியாழக்கிழமை(17) இடம்பெற்றது. அனிஷா பிர்தவ்ஸ் தலைமையில் இடம்பெற்ற நூல் வெளியீட்டை I WARE நிறுவனமானது a HEO நிறுவனத்துடன் இணைந்து நடத்தியது. இதன்போது கல்முனை மாவட்ட நீதிபதி எம்.எஸ்.சம்சுதீன் மற்றும் அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர் உள்ளிட்ட அதிதிகளுக்கும் அந்நூல் உத்தியோகபூர்வமாக வழங்கி வைக்கப்பட்டன.

**படங்கள்:** *திராய்க்கேணி செய்தியாளர்*

## மண்டூரில் தொடர்ந்துவரும் யானைகளின் அட்டகாசம்

மட்டக்களப்பு செய்தியாளர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பிரதேசத்தில் தொடர்ந்து காட்டு யானைகளின் அட்டகாசங்களும் தொல்லைகளும் அதிகரித்து வருகின்றன.

அப்பகுதியில் தங்கி நிற்கும் காட்டுயானைகளை அப்புறப்படுத்திவிட்டு யானைப் பாதுகாப்பு வேலிகளை அமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றபோதிலும், அது இற்றைவரையிலும் நிறைவேறாத நிலைமையே அங்கு காணப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், சனிக்கிழமை (19) படுவான்கரைப் பிரதேசத்தின் மண்டூர் பகுதியில் மக்கள் குடியிருப்புக்கு அருகில் பத்துக்கும் மேற்பட்ட காட்டு யானைகள் கூட்டமாக நின்றதை காணக்கூடியதாக இருந்தது.

## சர்வதேசத்தின் மத்தியில் நாடு கௌரவத்தை இழந்து வருகிறது

### மட்டக்களப்பு ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை கூறுகிறார்

புளியந்தீவு செய்தியாளர்

சர்வதேச மட்டத்தில் நமது நாட்டுக்கு கௌரவமும் நன்மதிப்பும் இருக்க வேண்டும். அவை இப்போது தேய்ந்தும் தொலைந்தும் வருகிறது. இதனால் சர்வதேசத்தின் ஆதரவை எமது நாடு இழந்து வருகிறது என மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், உலகின் மத்தியில் நமது நாடு ஒரு சிறிய நாடாக இருந்தபோதிலும், இங்கு இயற்கை வளங்கள் நிறைந்தும் மலிந்தும் காணப்படுகின்றன. இதனை நமது நாட்டின் அரசியல்வாதிகளும் மதத் தலைவர்களும் உணர்ந்து செயற்பட வேண்டும். பொருந்தாத செயற்பாடுகளை செயற்படுத்த முனையக்கூடாது. அவை ஆரோக்கியமானதாக இருக்க மாட்டாது. அப்படி முனைந்தால் அதே இன்னும் இன்னும் நாட்டின் நிலைமையை மோசமாக்கி விடும் என்றார்.

எமது நாடு சுதந்திரமடைந்து ஏழு தசாப்தங்கள் ஆகியும் அது இன்னமும் தன்னிறைவை அடையவில்லை. கடன் சுமையும் வறுமையும் இந்த நாட்டை வாட்டி வதைத்த வண்ணம் இருந்து வருகிறது. இதற்கு காரணம், பரிபாலன வியூகத்தினதும் கொள்கை வகுப்புகளினதும் தவறாகும்.

ஆட்சியில் இருந்த அரசை நாட்டு மக்கள் விரட்டி அனுப்பியிருக்கிறார்கள். எமது நாட்டின் முதல் பிரதமர் டி.எஸ்.சேனாநாயக்க தொடக்கம் ஜனாதிபதி கோட்டாபய வரை சிறுபான்மையினரின் நலன்களைக் கவனிக்காது ஆட்சி நடத்தி வந்தார்கள். அதற்கு பௌத்த மதத் தலைவர்கள் தூபம் போட்டார்கள். துணை போனார்கள். இது இன்னும் இன்னும் தொடரக்கூடாது. தொடருமாயின், சர்வதேசம் பார்த்துக் கொண்டிருக்காது. அதன் முடிவு விபரீதமாகிவிடும்.

எனது இந்தக் கருத்து யாருக்கெல்லாம் பொருந்துமோ அவர்கள் மனதில் உள்வாங்கி தங்களைத் திருத்திக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நாடு ஆரோக்கியம் நிறைந்ததாக மாறும் என்றார்.

## துப்பாக்கியுடன் தலைமறைவு

அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலை - மொரவெவ விமானப்படை முகாமில் பயிற்சியில் ஈடுபட்டு வந்த விமானப் படை வீரரொருவர் T-56 துப்பாக்கியுடன் காணாமல் போயுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மொரவெவ குளத்துக்கு அருகிலுள்ள காட்டுப் பகுதியில் ஆரம்பப் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவரே சனிக்கிழமை(19) மாலை காணாமல் போயுள்ளதாகவும் தெரியவருகின்றது.

காலி- வக்வெல்ல வீதியைச் சேர்ந்த 51415 எனும் விமானப்படை இலக்கமுடைய எம்.டி.கவீஷ (22வயது) என்பவரே தலைமறைவாகியுள்ளது விசாரணை மூலம் தெரிய வந்துள்ளதாகவும் இது குறித்து மொரவெவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இம்முறைப்பாடு தொடர்பில் மொரவெவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சித்த மருத்துவ பீடம் அங்குரார்ப்பண வைபவம்










மீனோடைக்கட்டு செய்தியாளர்

திருகோணமலை வளாக சித்த மருத்துவ அலகு, சித்த மருத்துவ பீடமாக தரமுயர்த்தப்பட்டதையடுத்து, அதை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வு வெள்ளிக் கிழமை(18) திருமலை வளாக சித்த மருத்துவ பீடத்தில் இடம்பெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு திருகோணமலை வளாக முதல்வர் பேராசிரியர் ச.தேவதாசன், கிழக்கு மாகாண சுகாதார சுதேச அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர், சித்த மருத்துவபீட பதில் பீடாதிபதி பேராசிரியர் சோ.சுதர்சன் மற்றும் துறைத்தலைவர்கள், விரிவுரையாளர்கள் உள்ளிட்ட பல உயரதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

சித்த மருத்துவத்தின் தந்தையாக இருக்கின்ற அகஸ்த்திய முனிவரின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வு, சர்வமத அனுஷ்டானங்களுடன் சித்த மருத்துவ பீடத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர்.

இதன்போது, சித்த மருத்துவத்தின் தோற்றம் பற்றியும் திருகோணமலை வளாக சித்த மருத்துவ அலகு ஆரம்பிக்கப்பட்டது தொடர்பிலும், அதன் வளர்ச்சி, பீடமாக தரமுயரக் காரணகர்த்தாக்கள் உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் அதிதிகளினால் பேசப்பட்டதுடன் மருத்துவ மாணவர்களின் கலை, கலாசார மற்றும் யோகா நிலைகள் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

## ஆயித்தியமலை சதாசகாயமாதா ஆலய திருவிழா தொடர்பான கலந்துரையாடல்



மட்டக்களப்பு

மட்டக்களப்பு ஆயித்தியமலை சதாசகாய மாதா திருத்தலத்தின் 2023ஆம் ஆண்டுக்கான திருவிழா ஏற்பாடுகள் தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் கலாநிதி யோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் சார்ஸ் மண்டபத்தில் வெள்ளிக்கிழமை(18) இடம்பெற்றது.

எதிர்வரும் 25ஆம் திகதி முதல் செப்டெம்பர் 03ஆம் திகதிவரை ஆயித்தியமலை புனித சதாசகாயமாதா திருத்தலத்தின் திருவிழா இடம்பெறவுள்ளதனால் விழாவுக்கான முன்னேற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.

பெருவிழா கூட்டுத் திருப்பலியை திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி பிறையன் உடைக்வே மற்றும் மறை மாவட்ட ஆயர் ஆகியோரினால் இணைந்து ஒப்புக்கொடுக்கப்படவுள்ளதுடன், முதல் திருப்பலியானது காலை 5.15 மணிக்கு இடம்பெறவுள்ளது.

திருவிழாவுக்கான பாதயாத்திரை செப்டெம்பர் 09ஆம் திகதி காலை 05 மணிக்கு புளியந்தீவு புனித மரியாள் பேராலயத்தில் திருப்பலியைத் தொடர்ந்து வவுணதீவினூடாகவும் மற்றும் செங்கலடி புனித நிக்கலஸ் ஆலயத்தில் காலை 5 மணி திருப்பலியைத் தொடர்ந்து கரடியனாறு ஊடாகவும் திருத்தலம் சென்றடையவுள்ளது. இதன் போது திருவிழாவுக்கான போக்குவரத்து, சுகாதாரம், குடிநீர் மற்றும் பாதுகாப்பு, மின்சாரம் வழங்கள் போன்ற விடயங்கள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டன. இந்நிகழ்வின் போது புனித சதாசகாய மாதா திருத்தல நிர்வாகி ஈ.ஜேமில்ட்டன், உதவி மாவட்ட செயலாளர் ஆ.நவேஸ்வரன், மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகரன், கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி சந்துதி பின்டோம மற்றும் பொலிஸார், கிராம சேவை உத்தியோகத்தர்கள், சுகாதார அதிகாரிகள் மற்றும் உயரதிகாரிகள் என பலர் கலந்து கொண்டார்கள்.



தேசிய ஆக்கத்திறன் விருது மாவட்ட மட்டப்போட்டி நிகழ்வானது மகாஜன கல்லூரியில் சனிக்கிழமை(19) இடம்பெற்றது. இதில் பேச்சாற்றல் போட்டியில் குறுமன்வெளி ஸ்ரீ மகா விஷ்ணு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய அறநெறிப் பாட சாலையைச் சேர்ந்த ராமு கிரோகித் மாவட்டத்தில் முதலிடம் பெற்று மாகாண மட்டத்துக்குத் தெரிவாகி அறநெறிப் பாடசாலைக்கும் கிராமத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

**படம்:** குருக்கள்மடம் செய்தியாளர்

# மட்டு. பொலிஸ் பிரிவுகளில் மூவர் தூக்கிட்டுத் தற்கொலை

மண்டூர் செய்தியாளர்

மட்டக்களப்பு மூன்று பொலிஸ் பிரிவுகளில் கடந்த மூன்று தினங்களில் மூவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மண்டபத்தடி, கன்னன்குடா பிரதேசத்தைச் சேர்ந்த 71 வயதுடைய கந்தக்குட்டி நடராசா என்பவர் 17ஆம் திகதி வியாழக்கிழமையும் 51 வயதுடைய திருமேனிப்பிள்ளை அருள்ராசா என்பவர் வெள்ளிக்கிழமை(18) மற்றும் மகிழூர் பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதுடைய தேவராசா திருத்திகா என்பவர் சனிக்கிழமை(19) என இவ்வாறு தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டவர்களாவர்.

குடும்பத்தகராறு மற்றும் மதுபோதைக்கு அடிமை, கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்ட தகராறு பெற்றோர் பிள்ளைக்கிடையே ஏற்பட்ட முரண்பாடுகளினால் இவர்கள் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

களுவாஞ்சிக்குடி நீதிமன்ற நீதிவான் ஜே.வி.ஏ.ரஞ்சித்குமாரின் உத்தரவு மற்றும் வவுணதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் வேண்டுதலுக்கமைவாக சம்பவ இடத்துக்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் பிரேதங்களைப் பார்வையிட்ட பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தும்படி சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிந்துரைத்தார்.

விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி மற்றும் வவுணதீவு, வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 13ஆவது திருத்தத்தை பயன்படுத்தி இன முறுகலை ஏற்படுத்தும் ரணில்

## கோவிந்தன் கருணாகரம் எம்.பி. குற்றச்சாட்டு

கனகராசா சரவணன்,
வாழைச்சேனை செய்தியாளர்



13ஆவது திருத்தச் சட்டத்தை பாராளுமன்றத்தில் கொண்டுவந்து சிங்கள மக்கள் மத்தியில் இன்று செல்லாக் காசுகளாக இருக்கும் அரசியல்வாதிகளைத் தட்டியெழுப்பி இனங்களுக்கிடையிலே மோதலை, முறுகலை ஏற்படுத்தி மீண்டும் ஒரு இனக்கலவரத்தை உருவாக்கும் சூழ்நிலைக்கு ஜனாதிபதி கொண்டு வந்திருக்கின்றார் என்றே எண்ணத் தோன்றுகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக இல்லாதொழிக்க வேண்டும் என்றும் சிங்கள இனவாதிகள் கூறுகின்றார்கள்.

மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பரவலாக்குவதற்கு நிபுணர் குழுவை ஜனாதிபதி நியமிப்பதென்பது நாட்டு மக்களை மாத்திரமல்லாமல் சர்வதேசத்தையும் குறிப்பாக, இந்தியாவையும் ஏமாற்றும் ஒரு செயலாகவே நாம் பார்க்கின்றோம்.

இலங்கையில் மாத்திரமல்ல, உலகத் தமிழர்கள் மத்தியிலும் இன்று பேசுபொருளாக மாறியிருக்கின்ற விடயம் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினூடாகக் கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டம். இது கொண்டுவரப்பட்டு 36 ஆண்டுகள் கடந்திருந்தாலும் இலங்கை அரசியலமைப்பிலிருக்கும் இந்தச் சட்டம் இன்னும் முழுமையாக அமுல்படுத்தப்படாமல் இருக்கின்றது.

அந்த வகையில், இந்த நாட்டில் மாறி மாறி அரசாங்கத்தைக் கைப்பற்றி ஆட்சிசெய்யும் கட்சிகளும் தலைவர்களும் இலங்கையின் அரசியலமைப்பையே மீறிக் கொண்டிருக்கின்ற சட்டவிரோதமான நடவடிக்கையை செய்து கொண்டிருக்கின்றார்கள்.

அந்த வகையில், இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதியாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க, 13ஆவது திருத்தச் சட்டத்தைப் பாராளுமன்றத்துக்கு கொண்டுவந்து பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெறவேண்டும் என்று கூறுகின்றார். உண்மையிலேயே அன்று 1987இல் 6 இல் 5 பெரும்பான்மையைக் கொண்ட பாராளுமன்றத்திலே தான் இந்த 13ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

அது மாத்திரமல்ல, அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் உட்பட அக்கட்சியின் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் இருக்காத நிலையில், ஒட்டுமொத்த சிங்களப் பிரதிநிதிகளை மாத்திரம் வைத்தே 6 இல் 5 பெரும்பான்மையாக நிறைவேற்றப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தை மீண்டும் ஒரு தடவை பாராளுமன்றத்துக்கு கொண்டுபோக வேண்டிய தேவை இருக்காது.

ஆனால், இந்த 13ஆவது திருத்தச் சட்டத்தையும் அதனூடாக ஏற்படுத்தப்பட்ட மாகாண சபை முறைமையையும் இல்லாதொழிப்பதற்கான சட்டம் அவர்களால் பாராளுமன்றத்திலே கொண்டுவரப்பட்டும் அதற்குப் பின்னர் இந்த நாடு எந்த நிலைமைக்குச் செல்கின்றது என்பதை அவர்களே உணர்ந்து கொள்வார்கள். இந்த 13ஆவது திருத்தச் சட்டத்தினூடாகக் கொண்டுவரப்பட்ட மாகாண சபைத் தேர்தலை நடத்தாது ஜனாதிபதி நீண்ட காலமாக இழுத்தடிப்பதென்பது ஏற்றுக்கொள்ள முடியாது - என்றார்.

# பெண்கள், சிறுவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பில் கலந்துரையாடல்



பெரியநீலாவணை செய்தியாளர்

கிழக்கு மாகாணத்தில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரதான சவால்களுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் முகமாக ஏ.ஆர்.மன்சூர் பௌன்டேசனின் ஸ்தாபகத் தலைவியும் அவுஸ்திரேலிய முஸ்லிம் பெண்கள் கவுன்சிலின் தலைவியுமான சட்டத்தரணி மரியம் மன்சூர் நளிமுடீன் மகளிர், சிறுவர் அலுவலகங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் கீதா குமாரசிங்கவை அவரது அமைச்சின் உத்தியோகபூர்வ காரியாலயத்தில் வைத்து சனிக்கிழமை(19) சந்தித்து கலந்துரையாடினார்.

இச்சந்திப்பில் பிரதானமாக கிழக்கு மாகாணத்தில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் உடல், உள, சமூக மற்றும் பொருளாதார ரீதியில் எதிர்கொள்ளும் பல சவால்களுக்கு தீர்வை வழங்கும் முகமாக ஏ.ஆர்.மன்சூர் பௌன்டேசனினால் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு கலந்தாலோசிக்கப்பட்டன.

இக்கலந்துரையாடலின்போது அமைச்சர் கீதா குமாரசிங்க, உடனடியாக துறை சார்ந்த அதிகாரிகளை அழைத்து மரியம் நளிமுடீனால் முன்வைக்கப்பட்ட குறித்த கோரிக்கைகளை சமர்ப்பித்து, குறுகிய காலத்துக்குள் நிறைவேற்றிக் கொடுக்குமாறும் பணித்தார்.

அத்துடன், மிக விரைவில் ஏ.ஆர்.மன்சூர் பௌன்டேசனின் கோரிக்கைகளை நிறைவேற்றும் முகமாக கிழக்கு மாகாணத்துக்கு விஜயமொன்றையும் மேற்கொள்ளவுள்ளதாகவும் அமைச்சர் வாக்குறுதியளித்தார்.

# லொறியுடன் மற்றுமொரு லொறி மோதி விபத்து



அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலை - ஹொரவ்வப்பொத்தான பிரதான வீதி மஹதிவுல்வெவ பிரதேசத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த லொறியுடன் மற்றுமொரு லொறி மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்துச் சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (20) இடம்பெற்றுள்ளது. இதன்போது லொறியின் சாரதி காயமடைந்த நிலையில், மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த லொறி வீதியோரத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த லொறியுடன் மோதியதாகவும் இதன்போது யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த லொறியின் சாரதியான எஸ். திலீபன் (வயது 38) என்பவர் காயமடைந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

குறித்த விபத்து தொடர்பில் மொரவெவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சீனிப் பாணியை விற்பனை செய்தவர் தப்பியோட்டம்

காத்தான்குடி மேலதிக செய்தியாளர்



மட்டக்களப்பு காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட புதிய காத்தான்குடியில் உள்ளூர் சுற்றுலாப் பயணிகளுக்கு சீனிப்பாணியை சுத்தமான தேன் என ஏமாற்றி விற்பனை செய்த நபர் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை(20) காலை சுகாதாரத் துறையினரால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

குறித்த நபர் தப்பியோடியபோதிலும் அவரிடமிருந்து ஆறுக்கும் மேற்பட்ட சீனிப்பாணிகளைக் கொண்ட போத்தல்கள் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட சீனிப்பாணிகளைக் கொண்ட போத்தல்கள் குறித்த இடத்திலேயே உடைக்கப்பட்டு அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

புதிய காத்தான்குடி அல்-அக்சா பள்ளிவாசலுக்கு வருகின்ற உள்ளூர் சுற்றுலாப் பயணிகளை ஏமாற்றி குறித்த நபர் சீனிப் பாணியை சுத்தமான தேன் என ஏமாற்றி ஒரு போத்தல் 2,000 ரூபா வரை விற்பனை செய்து வந்திருக்கிறார். இந்நிலையில், உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் இருவருக்கு சீனிப்பாணி போத்தல்களை விற்பனை செய்த நிலையில், பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து ஸ்தலத்துக்கு விரைந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குறிப்பிட்ட நபரை மடக்கிப்பிடித்தபோது குறித்த இடத்திலிருந்து அவர் தப்பியோடியிருக்கிறார். இருந்தபோதிலும், சுகாதாரத் துறையினர் அவரிடமிருந்த சீனிப்பாணி போத்தல்களை கைப்பற்றி அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புற்களை தேடிவரும் யானைக் கூட்டங்கள்



அம்பாறை மாவட்ட செய்தியாளர்

யானைக் கூட்டம் ஒன்று வேளாண்மை அறுவடையின் பின்னர் புதிதாக முளைக்கின்ற புல் இனங்களை உண்பதற்காக நாடி வருகின்றன. அம்பாறை மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை (18) மாலை மற்றும் சனிக்கிழமை(19) காலை மதிய வேளைகளில் திடீரென நாவிதன்வெளி, சொறிக்கல்முனை பகுதிகளை ஊடறுத்து யானைகள் இவ்வாறு வருகை தந்துள்ளன.

இதன்போது குறித்த யானைகள் அங்குள்ள புதிய புல் இனங்களை உண்ணுவதுடன் கூட்டத்தில் உள்ள யானைக் குட்டிகள் விளையாடுவதையும் காண முடிந்தது. இவ்வாறு சுமார் பெரிய யானைகள் மற்றும் குட்டிகள் என 12க்கும் அதிகமான யானைகள் அப்பகுதியில் உள்ள அறுவடை செய்யப்பட்ட வயல் நிலங்களை நோக்கி வருகை தந்திருந்தன.

தினமும் அப்பகுதிக்கு வரும் யானைக் கூட்டத்தை மக்கள் பார்வையிட்டு வருகின்றதுடன் இவ்வாறு வயல்வெளிகளை நோக்கி வருகை தந்துள்ள யானைகள் ஊருக்குள் பிரவேசிக்க முடியாத வகையில் பார்வையாளர்களாக உள்ள மக்கள் சத்தங்களை எழுப்பிய வண்ணம் உள்ளனர்.

மேலும், இப்பிரதேசத்தில் அண்மையில் வேளாண்மை அறுவடை மேற்கொள்ளப்பட்ட நிலையில், தீ வைக்கப்படுவதனாலும் அங்கு கொட்டப்படும் குப்பைகளை தினந்தோறும் 30க்கும் மேற்பட்ட யானைகள் உண்ணுவதற்கு வருகை தருவதுடன் அருகில் உள்ள பொதுமக்களின் உடமைகளுக்கும் சேதம் விளைவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# முறைகேடான முறையில் பெறுகின்ற சாரதி அனுமதிப்பத்திரமே வீதி விபத்துக்கு காரணம்

## முன்னாள் பிரதியமைச்சர் கணேசமூர்த்தி

துறைநீலாவணை செய்தியாளர்

நாட்டில் தற்போது இடம்பெறுகின்ற வீதி விபத்துகளுக்கு சாரதிகளின் செயற்பாடுகளே மிக முக்கிய காரணமாக அமைந்துள்ளன. இதனைத் தடுப்பதற்கான நடவடிக்கையை துரிதமாக அரசாங்கம் முன்னெடுக்க வேண்டுமென முன்னாள் பிரதியமைச்சரும் ஐக்கிய மக்கள் சக்தியின் பட்டிருப்புத் தொகுதி அமைப்பாளருமான சோமசுந்தரம் கணேசமூர்த்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசியல் இலாபம் கருதி சில அரசியல்வாதிகள் தமது ஆதரவாளர்களுக்கு பிழையான முறையில் சாரதி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொடுக்கின்றமையினால் அதிகளவான வீதி விபத்துகள் ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றன.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுகின்றபோது அதிகளவான வீதி விபத்துகளைத் தடுக்க முடிவது மாத்திரமல்லாது, மனித உயிர்கள் காவுகொள்வதைத் தடுக்க முடியும். நாட்டில் தற்போது பொருளாதார ரீதியான பிரச்சினை சீர்தூக்கியுள்ள நிலையில், முறையற்ற முறையில் போதிய பயிற்சி இல்லாத நபர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொடுக்கின்ற தரகர்களை இனங்கண்டு அவர்களுக்கு எதிராக சட்ட ரீதியான முறையில் நடவடிக்கையை முன்னெடுக்கின்ற போது கூடுதலான வீதி விபத்துகளுக்குத் தீர்வு காண முடியும்.

இது தொடர்பாக அரசாங்கம் உரிய கடுமையான நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டுமென கோரிக்கை முன்வைத்தார்.

# கல்முனை தெற்கில் இடம்பெற்ற இலவச சுகாதார நடமாடும் சேவை





அம்பாறை மாவட்ட செய்தியாளர்

கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்கள மாவட்ட அலுவலகம் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் இணைந்து நடத்தும் நடமாடும் இலவச சுகாதார வைத்திய சேவைகள் சனிக்கிழமை(19) கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நடைபெற்றன.

இந்நடமாடும் இலவச சுகாதார வைத்திய சேவையில் பற்சிகிச்சை, கண்பரிசோதனை, தொற்றா நோய் பரிசோதனைகள், ஆயுர்வேத மருத்துவ சேவைகள், உடல் நிறை குறியீட்டு(BMI) பார்த்தல், இரத்த அழுத்தம் நீரிழிவு நோய்க்குரிய பரிசோதனைகள், தகுதியுடையவர்களுக்கான பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவு, விண்ணப்ப விநியோகம், தகுதியுடையவர்களுக்கான முதியோர் அடையாள அட்டை விண்ணப்ப விநியோகம், மாற்றுத் திறனாளிகளுக்கான சுகாதார சேவைகள், தகுதியுடையவர்களுக்கான நோய்க் கொடுப்பனவுக்கான விண்ணப்ப விநியோகம் என்பன மேற்கொள்ளப்பட்டன.

குறித்த நடமாடும் சேவையில் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் முஹம்மத் அஸ்மி, கல்முனை பிராந்திய வாய்ச்சுகாதார நிபுணர் எம்.எச்.எம்.சரூக், நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எச்.ஜனூபா, சமூக சேவைகள் உத்தியோகத்தர் எம்.ஜீசான் உட்பட மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், கல்முனை பிரதேச செயலகத்தின் சமூக சேவைகள் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும், கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டு குறித்த நடமாடும் சேவையில் கலந்துகொண்டு பொதுமக்களின் தீர்க்கப்படாத பல்வேறு பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



சர்வதேச சமூகம் சரியான மொழியில் அரசாங்கத்துக்கு தீர்வுக்கு அழுத்தம் கொடுக்கொணுமாம் எண்டு ஈபிஆர்எல்எவ் தலை (மண்டை) சுரேஷ் சொல்லி இருக்காரு எலுவா....? அடே சரியான மொழி எண்டா எந்த பாஷையிலடாம்பி.... ஆங்கிலமா? சிங்களமா? ஹிந்தியா? சீனமொழியா எந்த மொழி எண்டத ஒள்ளுப்பம் விளக்கமாக சொன்னாத்தானே நல்லம்... ஓ.... ஒருவேள நீசொல்லுற மொழி 1986, காலத்தில புடிச்சு வைச்சு மண்டயில போட்ட அந்த மொழியோ..? அனுபவம் பேசுது போல....

# திருமலை ஊடகவியலாளர் சங்க நிர்வாகத் தெரிவு



கிண்ணியா செய்தியாளர்

திருகோணமலை அலஸ்தோட்டத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் சனிக்கிழமை(19) இடம்பெற்றது. மூவினங்களையும் சேர்ந்த ஒரேயொரு ஊடக சங்கமாக கடந்த 31 வருட காலமாக இயங்கி வரும் குறித்த சங்கத்தின் புதிய தலைவராக சிரேஷ்ட ஊடகவியலாளராக பொ.சற்சிவானந்தம் தெரிவு செய்யப்பட்டார்.

வாக்கெடுப்பு மூலமாக இவர் தலைவராகத் தெரிவாகியுள்ளார். திருகோணமலை ஊடக சங்க புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் பின்வருமாறு, தலைவர் - பொ.சட்சிவானந்தம், செயலாளர் - சுமேத ரோஷன், பொருளாளர் - ஆர்.பாயிஸ், சிரேஷ்ட உபதலைவர் - மங்களநாத் லியநாராச்சி, கனிஷ்ட உபதலைவர் - பி.லோஜினி, உப செயலாளர் ஏ.எல்.ரபாய்தீன் பாபு, உறுப்பினர்கள் எம்.வடிவேல், ஏ.ஜே.எம்.சாலி, எம்.ஏ.முஹமட், எஸ்.ஹயாக்கிரீவன், எம்.ஐ.ரிகாஸ் அஹமட், எம்.எஸ்.ஹலீம், வடமலை ராஜ்குமார், அ.அச்சுதன், கே.சூரியகுமாரி சங்கத்துக்கான கௌரவ ஆலோசகர் சட்டத்தரணி ஏ.சீ.எம்.முஸ்ஸில், சங்க கணக்குப் பரிசோதகர் ஏ.டபிள்யூ.எம்.முஜீப், நிர்வாகக்குழு உறுப்பினர்களும் தெரிவாகினர்.

திருகோணமலை மாவட்டத்தில் மூவினங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி குறித்த சங்கம் திறம்பட செயற்படுவதுடன் நல்லிணக்கத்துக்கான முன்னுதாரணமாகவும் காணப்படுகிறது. கடந்த காலங்களில் உயிர்நீத்தவர்களுக்கான இரு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டதுடன் ஊடகவியலாளர் சங்க உறுப்பினர்களுக்கான மேலங்கிகள், ஊடக கையேடுகளும் இதன்போது வழங்கப்பட்டன.

இதன்போது உரையாற்றிய புதிய தலைவர் பொ.சற்சிவானந்தம், ஊடகர்களாகிய நாம் இந்த மண்ணில் மூவினங்களைச் சேர்ந்த ஒரு சங்கமாக இந்தச் சங்கம் மாத்திரம் காணப்படுவது இன நல்லிணக்கத்துக்கு வழி வகுக்கின்றது. ஊடக உரிமைகளை வென்றெடுக்கக் கூடியவாறு எதிர்காலத்தில் திறம்படச் செயற்படுவோம் - என்றார்.

# FIFA Women's World Cup - 2023

## யூரோ சம்பியனை வீழ்த்தி முதல் முறை உலக சம்பியனான ஸ்பெயின்

ஏ. அகீல் சிஹாப்




ஆவது பீபா மகளிர் உதைபந்து உலகக்கிண்ணத் தொடரின் சம்பியனைத் தீர்மானிக்கும் இறுதிப்போட்டியில் நடப்பு யூரோ சம்பியன் இங்கிலாந்தை வீழ்த்தி ஸ்பெயின் முதல் முறையாக உலக சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

அவுஸ்திரேலியாவின் சிட்னி ஒலிம்பிக் பார்க்கில் மைதானத்தில் நேற்று இலங்கை நேரப்படி பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமான ஆட்டத்தின் முதல் பாதியின் 29ஆவது நிமிடத்தில் ஸ்பெயின் வீராங்கனை ஒல்கா கார்மோனா கோலடித்தார். இந்த ஒரு கோலுடன் முதல் பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தது. தொடர்ந்து இரண்டாவது பாதியில் ஸ்பெயின் அணிக்கு கிடைத்த பெனால்டி வாய்ப்பை இங்கிலாந்து தடுத்து நிறுத்தியது. இறுதிவரைக்கும் போராடிய இங்கிலாந்து அணியால் கோல் அடிக்க முடியாமல் போக 1-0 என்ற கோல் கணக்கில் ஸ்பெயின் சம்பியனானது.

ஸ்பெயின் 2015ஆம் ஆண்டுதான் உலகக்கிண்ணத்தில் தடம் பதித்தது. கடந்த 2019 உலகக்கிண்ணத்தில் ரவுண்ட் ஒவ் 16 சுற்றுக்கு நுழைந்த ஸ்பெயின், தங்களது மூன்றாவது உலகக்கிண்ணத்திலேயே சம்பியன் பட்டம் வென்று அசத்தியது.1995 இல் உலகக்கிண்ணத்தில் அறிமுகமான இங்கிலாந்து அணி முதல் முறையாக இறுதிப்போட்டிக்குத் தெரிவானது. 2019 இல் நான்காமிடத்தையும், 2015 இல் மூன்றாமிடத்தையும், 2023இல் இரண்டாமிடத்தையும் இங்கிலாந்து பெற்றது. 2022 இல் யூரோ சம்பியனான இங்கிலாந்து 2023 உலகக்கிண்ணத்தில் ஒரு போட்டியில் கூட தோல்வியுறாமல் வந்து இறுதிப்போட்டியில் ஸ்பெயினிடம் தோற்றுப்போனது.

**தொடரின் விருதுகள்**

கோல்டன் பூட் - ஹினாடா மியாசா (ஜப்பான்)
கோல்டன் க்ளோவ் - மேரி எர்ப்ஸ் (இங்கிலாந்து)
கோல்டன் போல் - இடானா பொன்மடி (ஸ்பெயின்)
இளம் வீராங்கனை – சல்மா பரலுஇலோ (ஸ்பெயின்)

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

## ஆஸியை வீழ்த்தி நான்காவது முறையாக வெண்கலம் வென்ற சுவீடன்




ஏ. அகீல் சிஹாப்

பீபா மகளிர் உலகக்கிண்ண உதைபந்துத் தொடரின் மூன்றாமிடத்திற்கான ஆட்டத்தில் தொடரை நடத்தும் அவுஸ்திரேலியாவை வீழ்த்தி சுவீடன் நான்காவது முறையாக வெண்கலப் பதக்கத்தை வென்றது. நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான ஆட்டத்தில் முதல் அரையிறுதி ஆட்டத்தில் ஸ்பெயினிடம் தோல்வியடைந்த சுவீடனும், இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் இங்கிலாந்திடம் தோல்வியடைந்த அவுஸ்திரேலியாவும் மோதின. சன்க்ரொப் மைதானத்தில் நடந்த போட்டியில் சுவீடன் அணி மிரட்டலான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. ஆட்டத்தின் 30 ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பில் சுவீடனின் மாக கோல் அடிக்க அதுவே சுவீடனின் வெற்றி கோலாகவும் மாறியது.

அவுஸ்திரேலிய அணியால் ஒரு கோல் கூட அடிக்க முடியாததால் சுவீடன் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று வெண்கலத்தை வென்றது. 2003இல் இரண்டாம் இடத்தைப் பிடித்த சுவீடன் அணி, 1991இல் ஜேர்மனியையும், 2011இல் பிரான்ஸையும், 2019இல் இங்கிலாந்தையும் வென்று மூன்றாம் இடத்தைப் பிடித்தது. மகளிர் உலகக்கிண்ண உதைபந்தாட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் ஐரோப்பிய அணிகள் பெற்றுள்ளமை விசேட அம்சமாகும்.



ஒக்டோபரில் இந்தியாவில் ஆரம்பமாகவுள்ள ஒருநாள் உலகக் கிண்ணத் தொடருக்கான சின்னத்தை ஐ.சி.சி. அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த இரட்டையர் சின்னத்தில், ஆண், பெண் சின்னங்கள் பாலின சமத்துவம் மற்றும் பன்முகத்தன்மை ஆகிய இரண்டின் அடையாளங்களாக நிற்கும் தனித்துவமான பண்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விதமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்திய கிரிக்கெட் வீர, வீராங்கனைகளான யாஷ் துல் மற்றும் ஷஃபாலி வர்மா ஆகியோர் சின்னங்களை வெளியிட்டனர்.

## விளையாட்டுத் துளிகள்

இம்மாதம் 30ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள தென்னாபிரிக்க அணியுடனான தொடருக்கான அவுஸ்திரேலிய அணியிலிருந்து ஸ்டீவ் ஸ்மித் மற்றும் மிட்செல் ஸ்டார்க் ஆகியோர் காயம் காரணமாக விலகியுள்ளனர். ஸ்மித்திற்கு இடது மணிக்கட்டில் தசைநாரில் காயம் ஏற்பட்டுள்ளது. அது குணமடைய இன்னும் நான்கு வாரங்கள் எடுக்கும் எனத் தெரிகிறது. அதேவேளை, வேகப்பந்துவீச்சாளர் மிட்செல் ஸ்டார்க் ஆஷஸ் தொடர் முடிவடைந்ததில் இருந்து இடுப்பு வலியால் அவதிப்பட்டு வருகிறார்.

..........................................

இலங்கை கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட வீரரான லஹிரு திரிமான்னே அண்மையில் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். அதனைத் தொடர்ந்து தனது ஓய்வுக் கடித்தை இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்திடம் கையளித்த நிலையில், குறித்த கடிதத்தை ஏற்றுக் கொண்டதாக பிரதம நிறைவேற்று அதிகாரி ஆஷ்லி டி சில்வா தெரிவித்தார்.

..........................................

பீபா மகளிர் உலகக்கிண்ணத் தொடர் மூலம் 570 மில்லியன் டொலர் வருமானம் ஈட்டியுள்ளதாக பீபா தலைவர் கியானி இன்ஃபான்டினோ தெரிவித்தார். அத்துடன், தற்போது கிடைத்துள்ள வருவாயானது கட்டார் ஆடவர் உலகக்கிண்ண பரிசுத்தொகையான 440 மில்லியன் டொலரை விட அதிகம் என்றும் அவர் குறிப்பிட்டார். மேலும் பேசிய இன்ஃபான்டினோ, அடுத்த உலகக்கிண்ணத்தில் அணிகளின் எண்ணிக்கையை 24இலிருந்து 32 ஆக உயர்த்தவுள்ளதாகவும், பரிசுத்தொகையையும் உயர்த்தவுள்ளதாக உறுதியளித்தார்.

..........................................

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது ரி20 போட்டியில் 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் ஐக்கிய அரபு இராச்சிய அணி வரலாற்று வெற்றியைப் பதிவு செய்தது. இந்த வெற்றியானது நியூசிலாந்து அணிக்கெதிராக எந்தவொரு வகை கிரிக்கெட்டிலும் ஐக்கிய அரபு இராச்சிய அணி ஈட்டிக்கொண்ட முதல் வெற்றியாகும். இதேவேளை, டெஸ்ட் அந்தஸ்த்தைப் பெறாத ஓர் அணிக்கு எதிராக நியூசிலாந்து அணி சந்தித்த முதல் தோல்வியும் இதுவாகும்.

## 13 ஆண்டுகளின் பின் சம்பியன் பட்டம் வென்ற சென். பீட்டர்ஸ்




ஏ. அகீல் சிஹாப்

பாடசாலைகளுக்கிடையிலான டயலொக் முதல்தர றக்பி லீக் தொடரின் சுப்பர் சுற்றின் இறுதிப்போட்டியில் நடப்பு சம்பியன் இஸிப்பத்தான கல்லூரியை வீழ்த்தி சென். பீட்டர்ஸ் கல்லூரி 13 வருடங்களின் பின்னர் சம்பியன் பட்டத்தை சுவீகரித்தது.

பம்பலப்பிட்டி சென். பீட்டர்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விறுவிறுப்பான ஆட்டத்தின் முதல் பாதி முடிவில் சென். பீட்டர்ஸ் கல்லூரி 15 புள்ளிகளையும், இஸிப்பத்தான கல்லூரி 10 புள்ளிகளையும் பெற்றிருந்தன.

இரண் டாவது பாதி ஆட்டத்தில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய சென். பீட்டர்ஸ் கல்லூரி இறுதியில் 28 - 17 என்ற புள்ளிகள் கணக்கில் இஸிப்பத்தான கல்லூரியை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது. போட்டியின் ஆட்டநாயகனாக சென். பீட்டர்ஸ் கல்லூரியின் விந்திய டி மெல் தெரிவானார்.

Dialog SCHOOLS RUGBY



## புதிய அவதாரத்துடன் மீண்டும் மும்பையில் இணைந்த மாலிங்க

ஏ. அகீல் சிஹாப்

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்துவீச்சாளரும், மும்பை இந்தியன்ஸ் அணியின் முன்னாள் வீரருமான லசித் மாலிங்க மும்பை இந்தியன்ஸ் அணியின் பந்துவீச்சு பயிற்சியாளராக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

2019ஆம் ஆண்டு மும்பை அணிக்கு கிண்ணத்தை வென்று கொடுத்த மாலிங்க, ஒட்டுமொத்த கிரிக்கெட்டிலும் ஓய்வை அறிவித்தார். கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெற்ற அவர், ராஜஸ்தான் மற்றும் மும்பை நியூயோர்க் அணிகளுக்கு பந்துவீச்சு பயிற்சியாளராக செயற்பட்டு வந்தார். அண்மையில் மேஜர் லீக் கிரிக்கெட் தொடரில் மாலிங்கவின் பந்துவீச்சு பயிற்சியால், மும்பை நியூயோர்க் அணி சம்பியன் பட்டம் வென்று அசத்தியது.

இதனால் உற்சாகமடைந்த மும்பை அணி நிர்வாகம், மும்பை அணியின் பந்துவீச்சு பயிற்சியாளராக மாலிங்கவை ஒப்பந்தம் செய்துள்ளது. நியூசிலாந்தின் ஷேன் போண்ட் மும்பை அணியின் வேகப்பந்துவீச்சு பயிற்சியாளராக செயற்பட்டு வந்த நிலையில், அவரது இடத்திற்கு மாலிங்க கொண்டு வரப்பட்டுள்ளார்.

ஏற்கனவே கடந்த 2018ஆம் ஆண்டு மும்பை அணியின் ஆலோசகராக மாலிங்க செயற்பட்டுள்ளார். தற்போது மீண்டும் மும்பை அணியுடன் மாலிங்க இணைந்திருப்பதால், ரசிகர்கள் பலரும் உற்சாகமடைந்துள்ளனர்.

சட்டத்தரணிகள் – நீதிமன்ற உத்தியோகத்தர்கள் நல்லுறவு கிரிக்கெட் போட்டி

## அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற உத்தியோகத்தாகள் அணி சம்பியன்

கோணாவத்தை செய்தியாளர்

அக்கரைப்பற்று நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற உத்தியோகத்தர்கள் அணி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நீதிமன்ற உத்தியோகத்தர்களுக்கும் சட்டத்தரணிகளுக்குமிடையில் நல்லுறவைக் கட்டியெழுப்பும் வகையில் சிநேகபூர்வமாக ஏற்பாடு செய்யப்பட்ட இக்கிரிக்கெட் சுற்றுப்போட்டி மாவட்ட, நீதவான் நீதிமன்றங்களின் நீதிபதி எம்.எச்.எம்.ஹம்சாவின் வழிகாட்டலில் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் எம்.எம்.பகிஜ் தலைமையில் பள்ளிக்குடியிருப்பு விளையாட்டு மைதானத்தில் இக்கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஞாயிற்றுக்கிழமை(13) நடைபெற்றது.

இச்சுற்றுப் போட்டியில் சட்டத்தரணிகள் அணி, நீதவான் நீதிமன்ற உத்தியோகத்தர்கள், மாவட்ட நீதிமன்ற உத்தியோகத்தர்கள் அணி ஆகிய மூன்று அணிகள் பங்குபற்றியிருந்தன. இதன் இறுதிப் போட்டியில் மாவட்ட நீதிமன்ற உத்தியோகத்தர்கள் அணியும் சட்டத்தரணிகள் அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய மாவட்ட நீதிமன்ற உத்தியோகத்தர்கள் அணி 153 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. 154 என்ற வெற்றி இலக்கை நோக்கி எதிர்த்தாடிய சட்டத்தரணிகள் அணி 107 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டது. 46 ஓட்டங்களால் மாவட்ட நீதிமன்ற உத்தியோகத்தர்கள் அணி வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.ரொகஷ், கௌரவ அதிதிகளாக அக்கரைப்பற்று மாவட்ட நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா, சம்மாந்துறை மாவட்ட நீதிபதி ரீ.கருணாகரன், கல்முனை மாவட்ட நீதிபதி ஏ.எம்.எம். றியாழ், நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எஸ்.எம்.சம்சுதீன் உட்பட சிரேஷ்ட சட்டத்தரணிகளான எம்.எம்.அப்பாஸ், எஸ்.எம்.ஏ.கபூர் ஆகியோரும் கலந்துகொண்டு வெற்றி பெற்ற அணியினருக்கு பிரமாண்டமான வெற்றிக் கிண்ணத்தை வழங்கினர்.





















Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7